பதிவு இலக்கம் : 105267
வார இதழ்

# தீபம்

26.07.2020 தீபம் – 235
இணையப் பதிப்பு



1983

# கறுப்பு ஜூலை

கட்சி அரசியலுக்கப்பால் மக்கள் அரசியலைப் பேசும் தமிழருக்கான ஒரே வார இதழ்




**உலக நிலவரம்**

தொற்றாளர்கள் **16.5 மில்லியன்**
இறப்பு **653,973**
குணமடைந்தோர் **10.12 மில்லியன்**

# இடர்காலப் பதிவுகள்

**இலங்கை நிலவரம்**

| தொற்றாளர்கள் | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் |
|---|---|---|
| 2804 | 672 | 2121 |

- கணபதி சர்வானந்தா -

உலகம் சற்றும் எதிர்பாராது எதிர்கொண்ட கொரோனா இடர்காலம் சகல துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்று சொல்லலாம். அதனைக் கட்டுப்படுத்த மனிதரால் ஏற்றபடுத்தப்பட்ட சமூக முடக்கம் என்று சொல்லப்படுகின்ற "லொக் டவுன்" என்ற முறைமை, மனிதனை மட்டுமல்ல உலகப் பொருளாதாரத்தையும் முடக்கியுள்ளது. அந்த வைரசிடமிருந்து மீள எமக்கு ஒரு புதிய பொருளாதாரச் சிந்தனை தேவைப்படுவதை பர்மிங்காம் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஹனா ஸிம்போசிகா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆனால் இப்படியாதொரு நெருக்கடி வருவது இது முதல் தடவையல்ல. இந்த நெருக்கடி நிலைமையானது 1920 களில் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தநிலையையும் , 2007-08 உலக நிதி நெருக்கடியைத் தொடர்ந்து ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தநிலையையும் பிரதிபலிக்கிறது. ஆனால், தற்போதைய நெருக்கடியை "பொருளாதார முடக்கம்" என்று பெயரில் உள்ளடக்குவது தவறு. ஏனெனில் தற்போதைய முடக்கத்துக்கு "கொரோனா" மட்டும் காரணமில்லை. காலகாலமாக ஏற்பட்டுவந்த பொருளாதாரப் பின்னடைவுகள் தற்போது சடுதியாக ஏற்பட்ட சமூக முடக்கத்தால் ஒரு தேக்க நிலையை எட்டியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

1980 களில் இருந்து உலகம் கொண்டிருந்த மேலாதிக்கப் பொருளாதார முன்னுதாரணத்தால் ஊக்குவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைத் தேர்வுகளின் நேரடி விளைவுகளே வேலையின்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியின் வியத்தகு வீழ்ச்சி எனலாம். எமது பொருளாதார வாழ்க்கையை ஒழுங்கமைக்க சுதந்திர சந்தைகளே சிறந்த வழி என்ற ஒன்றைத் தேர்ந்தமை, நிதித் துறையின் நலன்களை ஊக்குவித்தது. முதலீட்டை ஊக்கப்படுத்தியது. ஆனால் தொற்றுநோயைக் கையாள்வதற்கான பொதுத் துறையின் திறனைப் பலவீனப்படுத்தியதே தற்போது வளர்முக நாடுகள் நோயைக் கட்டுப்படுத்தத் தடுமாறுவதற்குரிய காரணம் எனலாம். அதனாலேயேகொரோனா வைரஸ் மீட்புக்கு ஒரு புதிய பொருளாதாரச் சிந்தனை தேவைப்படுகிறது என்று செ ா ல்லப்படுகிறது. இது தனிப்பட்ட நலன் என்றதை விட சமூகத்தின் நல்வாழ்வை நிலைநிறுத்திய சிந்தனையாகத் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது.

பொருளாதாரத்துறை சார்ந்துமட்டும் நாம் சிந்திக்காது மக்கள் நலன்களைப் பேணுவதற்காக நிறுவப்பட்ட அனைத்துத் துறைகள் சார்ந்தும் புதிய சிந்தனைகளும், அவற்றிற்கூடாக ஏற்படுத்தப்பட வேண்டிய புதிய மாற்றங்களைப் பற்றியும் ஆராய வேண்டியது கட்டாயம் என வலியுறுத்தப்படுகிறது.இனியொரு காலம் இது போன்ற வைரஸ் தாக்கம் வரும்போது அதனை முன் கூட்டியே அறிவதற்கும், அதன் செயற்திறனை மழுங்கடிக்கவும் தேவையான பொறிமுறை ஒன்றின் அவசியம் பற்றிய தேடல் ஒன்றும் அவசியமாகிறது.



ஏனெனில் கொரோனா வைரஸ் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விளைவுகளால் சமூகம் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமூக முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல மனித நாகரீகத்தின் திறவுகோல் என்று சொல்லப்பட்ட விஞ்ஞானத்தின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் தெ ா லைத்துக் கொண்டிருக்கிறது. சமூகத்தில் அவலத்தை ஏற்படுத்துக் கொண்டிருக்கின்ற இவ்வாறான மரணங்களை தடுத்து நிறுத்த மாற்று வழி ஒன்றைத் தேட அவர்கள் அருகதையற்றவர்கள் என்ற விடயத்தைக் காலம் துகிலுருத்திக் காட்டிய பின்பு, மக்கள் தாம் பாதுகாப்பற்றதொரு உலகத்திலேயே வாழந்து வருகின்றனர் என்ற சிந்தனைவயப்படத் தொடங்கியிருக்கின்றனர். "நாம் தனித்து விடப்பட்டிருக்கிறோம்." என்ற ஏக்க உணர்வு மனிதகுலத்தை எதுவரை கொண்டு சென்று நிலைநிறுத்துமோ தெரியவில்லை.?

பூகம்பத்தையும், எரிமலையையும், சுனாமியையும் பற்றி முன்கூட்டியே எதிர்வு கூறத் தெரிந்த உலகத்துக்குக் கொறொனாவின் வரவு பற்றிய எந்தவித சமிக்ஞையையும் தரமுடியவில்லை என்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது. அண்டவெளி ஆராய்ச்சியும் அது பற்றிய சாகசங்களும் அல்ல இப்போது மக்களுக்குத் தேவையான விடயம். மரணத்தின் பிடியில் இருந்து தப்புவதற்கு வழி தேடியாக வேண்டும் என்று ஒருவர் தனது முகநூலிலே பதிவிட்டிருக்கிறார். அவர் அந்தப் பதிவிலே இவ்வாறு தொடர்கிறார்.

"விஞ்ஞான வளர்ச்சியைக் கண்டு பெருமித்துப்போன மக்கள் அதனூடாகத் தமக்கு பெருத்த பாதுகாப்பொன்றிருப்பதாக நம்பினர். என்ன விலைகொடுத்தும் தமது நலன்களை அது பேணும் என்று இறுமாப்போடு இருந்தவர்கள் கண்காண , மரத்திலிருந்து மலர்கள் வாடி உதிர்வதைப் போல மனித மரணங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

மெய்ஞானத்தில் நம்பிக்கை வைத்திருந்த பலர் அதில் நம்பிக்கை இழந்தவர்களாகக் கடவுளைக் கூடக் கைவிட்டு விட்டனர் " என்று தனது பதிவை முடித்திருக்கிறார்.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் உலகப் பொருளாதாரச் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் ஏற்பட வேண்டிய புதிய மாற்றங்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். இந்த வைரஸ் வளர்முக நாடுகளின் பொருளாதாரப் போக்கினை மட்டுமல்ல. எமது நாட்டிலுள்ள பின்தங்கிய கிராமத்து வாழ்வியலிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

கிராமத்துப் பண்பாடுகளையும், கலாசாரத்தையும் பிரதிபிலிக்கின்ற கிராமத்துச் சந்தைகள் தமது எல்லைகளைச் சுருக்கிக் கொண்டிருக்கின்றன.விவசாயிகள் தமது பொருட்களை தத்தமது வீட்டுப் படலைகளுக்கருகே சந்தைப்படுத்த வாய்ப்பாக கொரோனா காலத்தே புதியதாகத் தோன்றிய இடைத் தரகர்களின் நடமாடும் கொள்வனவு நிலையங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. நகர மையங்களிலும், நெடுஞ்சாலைகளையும் ஒட்டிக் காணப்பட்ட சிறப்பு அங்காடிகள். தற்போது கிராம விளிம்புகள்வரை சுருங்கிச் சென்றுவிட்டன.

சிறப்பங்காடிகளின் பெருமையை இது போன்ற கடைகள் குறைத்திருக்கிறதாகக் கருதலாம்.

கொரோனா காலத்தில் ஏற்பட்ட சிந்தனைகளும், அனுபவங்களும் தோற்று வித்திருக்கும் புதிய வெளிகளைப் பலர் பலவிதமாகப் பார்த்தாலும் அடிப்படையில் அவைகள் ஒன்றே.

நாட்டை நிர்வகிக்கின்ற அரசு இதுபோன்ற சவால்களுக்கு முகம் கொடுப்பதைப் பெரிய அளவில் சிந்திக்கின்ற அதே சமயம் கிராமத்திலுள்ள ஒரு சாதாரண குடும்பத்தை நிர்வகிக்கின்ற விவசாயி தன்னளவில் சிறிதாகச் சிந்திக்கிறான். இருந்தும் கொரோனா காலத்து இடர்முகாமைத்துவத்தில் ஒரு கிராமம் செயற்பட்டதைப் போன்று ஒரு நகரத்தாலோ அல்லது வளர்முக நாட்டினாலோ சிறப்பாகச் செயற்பட முடியவில்லை என்ற கசப்பான உண்மையையும் நாம் ஒத்துக் கொண்டுதானாக வேண்டும்.

சமூக இடைவெளியேப் பேண அதற்குரிய வசதி வாய்ப்புகளைக் கிராமங்கள் கொண்டிருந்தன. கலாசார பண்பாடும் அதற்கியைவாக இயல்பிலேயே காணப்பட்டன. நோய் எதிர்ப்பைப் பேண இயற்கை கொடுத்த உணவுவகைகளும், முலிகைகளும் அங்கே நிறைந்திருந்தன. சமூக முடக்கம் அவர்களை எதுவிதத்திலும் முடக்கியதாகவும் இல்லை. பாதித்ததாகவும் இல்லை. அவர்களிடையேயும் கொரோனா பல புதிய மாற்றங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
26.07.2020 தீபம் - 235
இணையப் பதிப்பு

# கறுப்பு யூலை வடுவாக வரலாற்றில்!

யூலை 23 ? தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த இன அழிப்பு உச்சத்தைத் தொட்ட தினமாகவே யூலை 23 உலக வரலாறில் பதியப்பட்டிருக்கிறது. தமிழ் இனத்துக்கு எதிராகச் சிங்கள இனவாதிகள் திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்தி அந்த இனத்துக்குப் பேரழிவை ஏற்படுத்திய நாட்களை யூலை மாதம் உள்ளடக்கி இருப்பதால் 1983 க்குப் பின்பு வந்த அத்தனை யூலை மாதங்களும் அந்தப் பெருந்துயரை ஞாபகப்படுத்துவதாகக் "கறுப்பு யூலை" என்று பெயர் பெறலாயிற்று.

இப்படி ஒரு கேவலம் இடம்பெற்றதையிட்டு வெட்கப்பட வேண்டிய இனம் இன்னும் இனவாதத்தைக் கக்கிக்கொண்டே தமது அரசியல் நடவடிக்கையை முன்னெடுக்கிறது. உரிமை கேட்பவர்களுக்கு "யூலை 1983" தான் பதிலாகக் கிடைக்கும் என்று, "அன்பை மட்டும்" வேண்டித் தமது ஆடம்பர வாழ்வைத் துறந்த புத்த பகவானை ஆராதிப்பவர்கள் என்றும், புத்த மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள் என்றும் சொல்லப்படுகின்ற பௌத்த துறவிகள் சொல்வது தான் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இலங்கைத் தீவில் முதன்மைபெற்று விளங்கும் பௌத்த சிங்கள மக்கள் இவர்கள் போன்றோரின் வழிநடத்தலின் கீழ் வாழ வேண்டி இருப்பதுதான் நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்குகிறது. ஒரு நாடு சுபீட்சம் பெற்ற நாடாக விளங்க வேண்டும் என்றால் அங்கிருக்கின்ற மக்கள் அறம் சார்ந்து சிந்திப்பவர்களாக இருக்க வேண்டியது அவசியம். மக்கள் அறம் சார்ந்து இல்லை என்றால், அவர்கள் அனைத்து ஐஸ்வர்யங்களையும் இழந்தவர்களாக வாழவேண்டிய கட்டாயத்துக்குள் இருக்கிறார்கள் என்று பொருள்படும். அவர்கள் தொடர்ந்து இயற்கையினால் சோதனைக்குள்ளாக் பட்டவர்களாக வாழ வேண்டிய நிர்பந்திப்பந்தத்துக்கு உள்ளாகப்படுவார்கள் என்றதைப் புத்த பகவான் தனது போதனையிலே சுட்டிக்காட்டியுள்ளார்.


இயற்கை விதிகளுக்கு எதிராகச் செயற்படுகின்ற மனித குலம் சந்தித்துவரும் இடர் நிறைந்த வாழ்க்கை பற்றி கதைகள் வரலாறாக இல்லை. சரித்திரமாக இல்லை. அதனைத் தற்சமயம் கண் முன்னே பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நிகழ்காலச் சம்பவங்களால் மனித குலம் இளைத்துப்போயிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத ஜீவராசி ஒன்று உலகத்தைத் தன்பிடிக்குள் சிக்க வைத்துச் சின்னாபின்னப் படுத்திக் கொண்டிருக்கிறது. வல்லவன் என்று சொல்லிக் கொள்ளுகின்ற எவராலும் அதற்கு எதிர்வினையாற்ற முடியாதிருப்பதென்பதே வெட்கக் கேடான விடயம் எனலாம்.

இனவரலாற்றை முன்னெடுக்கும் புத்த துறவிகள் இணைந்து ஒரு இனத்தின் வரலாற்று அழிப்பிலும் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். பிற மதங்கள் மீதும், பிற இனங்கள் மீதும் அவர்கள் கொண்ட காழ்ப்புணர்வின் பரிதிபலிப்பே இவ்வகையான ஒடுக்குமுறைக்கு வழிவகுப்பதாகத் தெரிகிறது. ஒரு இனத்தின் நீண்டகால வரலாற்றை மாறுபடச் செயற்கையாக எழுதமுனைவதென்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பது இப்போது அவர்களுக்குப் புரியாது. ஒரு இனத்தின் வரலாறு, ஒரு நாட்டின் வரலாறோடு பின்னிப் பிணைந்தே காணப்படும். அந்த நாட்டின் வரலாறு என்பது அது தன்னகத்தே குடிகொண்டிருந்த அத்தனைபேரையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்பது இயல்பு. எனவே இலங்கைத் தமிழ் குடிகள் வரலாற்றைத் திரிபுபட எழுதுகின்ற முயற்சியில் அவர்கள் தங்கள் வரலாற்றையும் கொச்சைப் படுத்தப் போகிறார்கள் என்றே எண்ணலாம்.

இலங்கைத் தமிழ் குடிகள்பற்றிய உண்மைத் தரவுகளை மறுத்து, அவற்றை மறைக்க முற்படுகையில், சிங்கள இனத்தின் தொடக்க வரலாற்றைச் சொல்லுகின்ற அவர்களின் வேதாகமமான "மஹாவம்சமும்" திருத்தி எழுதப்பட வேண்டும். எனவே அந்த இனம் பிற இன வரலாற்று அழிபொன்றைச் செய்ய முற்படுகையில் அதனூடாகத் தன்னையும் கொச்சைப்படுத்தப் போகிறது என்பதுதான் உண்மை.

பிறரைச் சிறுமைப்படுத்த வேண்டும் என்று எண்ணும் தேரர்கள் அதன் வழியே தம்மையும், தமது இனத்தையும் சிறுமைப்படுத்தப் போகிறார்கள் என்பது திண்ணம். இலங்கை வரலாற்றுக்குள் மட்டுமே சிங்கள இனவரலாறு முதன்மை பெறுகிறது. ஆனால் தமிழர் வரலாறு உலக வரலாற்றோடு பின்னிப் பிணைந்தொன்றாகக் காணப்படுகிறதே. அப்படியாயின் அவற்றையும் இவர்கள் மாற்றியாக வேண்டும்? வரலாற்றுத் திரிபுகள் மூலமும், பொய்யுரைகள் மூலமும் சிங்கள இனம் தன்னைக் கொச்சைப்படுபோகிறது. அதுவும் வரலாற்றுப் பதிவாக நின்று அந்த இனத்தை மென்மேலும் சிறுமைப்படுத்தும் என்பதுதான் வரலாறு சொல்லும் அனுபவம்.

- கம்சன் -




## தேர்தல், அரசியல்வாதிகள், மக்கள்

கோவில் திருவிழாக்களைப் போன்று இவ்வாண்டுத் தேர்தல் திருவிழாவும் கொரோனாவின் புண்ணியத்தால் களைகட்டல் ஏதுமின்றி - இரைச்சலால் சூழலின் அமைதிக்கு பெருமளவில் பங்கம் ஏதுமின்றி பரபரப்புகள் குறைந்த நிலையில் அதற்குரிய நாளை மிகவும் அண்மித்துக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் தேர்தல் காலத்து அமைதிச் சூழலின் பின்னர் ஏதோவோர் "அமானுஷ்ய" தன்மை புதைந்துள்ளதாக மக்கள் கருதுவதில் அர்த்தமில்லை என்று கருதி விடமுடியாது. போர்க் காலத்தில் நடந்தேறிய தேர்தல்களை விடவும் எதிர்வரும் பொதுத் தேர்தல் முற்றிலும் மாறுபட்ட ஒரு களத்தில் நிகழவுள்ளது. பேரினவாதக் கட்சிகள் தங்களுக்குள் தாங்களே முரண்பட்டு - பிளவுபட்ட நிலையில் களமிறங்கியுள்ளமை அதிகம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

யானை இரண்டாகிவிட்டது கை, கதிரை, எல்லாமே பலவாகி விட்டன இடதுசாரிகள் வலதுசாரிகளுக்குள்ளும், வேறு குழுக்களுள்ளும் புகலிடம் தேடி தனித்துவம் இழந்துவிட்டார்கள். மலையகத் தலைமைகளும் தம்முள் முரண்பட்டு தத்தம் அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப பேரினவாத கட்சிகளுள் அடைக்களம் தேடி பேரம் பேசும் ஆற்றலை பறிகொடுத்து விசுவாசம் காட்டத் தயாராகிவிட்டார்கள்.

முஸ்லீம் மக்களின் தலைவர்கள் ஈஸ்டர் திருநாள் அசம்பாவிதங்களுக்கு பின்னர் இஸ்லாமிய மக்களுக்கு தீர்க்கமான தெளிவான முகவரியை வழங்கத் தவறியவர்களால் திசை மாறி நிற்கிறார்கள். நம் தமிழர் தரப்புத் தலைவர்களோ தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டை சின்னா பின்னப்படுத்தி வல்லாதிக்க, அயலாதிக்க, பெரும்பான்மை இன மேலாதிக்க சக்திகளுக்கு குடை, கொடி, ஆலவட்டம் பிடிப்பவர்களாகவும் ஆட்சியாளரை அரவணைத்து செல்ல ஆவலுடன் வாய்பிழந்து நிற்பவர்களாகவும் நிவாரண மற்றும் சலுகை அரசியலுக்குள் மக்களை தள்ளிவிட்டு தமது சுய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள தருணம் பார்த்து தமது அரசியல் மூலோபாயங்களை நகர்த்துபவர்களாகவும் மக்கள் பிரச்சினைகளை இந்தியாவும், சர்வதேசமும் கவனித்துக் கொள்ளும் என சாத்தியமே அற்ற வாக்குறுதிகளைத் தொடர்ந்தும் வழங்குபவர்களாகவும் உள்ளனர்.

இவர்கள் அனைவருக்குள்ளும் மனிதம் சார்ந்து மக்கள் மற்றும் தேசியம், தேசம் என்ற உணர்வு பூர்வமான பொது நலன் நோக்கிய சிந்தனையுடன் மக்கள் முன் வந்து வாக்களிக்க கோரி உண்மை, நியாயம், சமூக அக்கறை ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படும் சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

அவர்களுக்கு, மக்கள் எத்தகைய அரசியல் அறிவுத் தெளிவும், தொலைநோக்குச் சிந்தனையும் கொண்டவர்களாக இந்தக் நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது தெரியவில்லை. இது அவர்களது பலவீனம் அதேசமயம் மேற்குறித்த அரசியல் சிந்தனையாளர்களை தேசிய - மற்றும் மானுட நலனுக்காக ஓரளவுக்கேனும் அர்ப்பணிப்புடன் பாடுபடக்கூடிய சமூக அக்கறையாளர்களை இனங்கண்டு ஆதரிக்கும் பக்குவம் மக்களிடம் இல்லை.

இது மக்களின் பலவீனம் இதுவே இந்த நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் மூல காரணமுமாகும். இந்த அவல நிலையை அப்படியே இம்மியளவும் மாறாது தக்க வைப்பதன் மூலமே இந்த அரசியல் தொழிலை தொடர்ந்து நடத்தலாம் என்பதே ஆட்சி பீடத்தை குறிவைத்து அதிகார அரசியல் செய்ய முனைவோரின் இலட்சியம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நாடு மக்கள், ஆட்சிப்பீடம், அரசியல் என அனைத்துள்ளும் ஊடுருவி அச்சுறுத்தி வரும் இனவாத - மதவாத - சக்திகள் விடுக்கும் தொடர் அறிக்கைகளும், அச்சுறுத்தல்களும், நாட்டின் எதிர்காலத்தை நிரந்தரமாகவே அதல பாதாளத்துள் தள்ளும் நாசகாரிகளாக உள்ளதே அச்சமூட்டும் விடயம்!

நல்ல நாடு , நல்ல அரசியல்... ஆனால் பாவம் மக்கள்!

# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்

## பல்தேயஸ் பாதிரியாரும் யாழ்ப்பாணமும்

இ. மயூரநாதன்



பல்தேயஸ் பாதிரியார்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் தொடக்க காலம் தொடர்பான யாழ்ப்பாணத்து வரலாறு பற்றியும், அக்காலத்துச் சமூக நிலை பற்றியும் பதிவு செய்த முக்கியமான ஒரு ஆளுமை ஒல்லாந்தப் பாதிரியார் பிலிப்பஸ் பல்தேயஸ் ஆவார். "கிழக்கிந்தியாவின் பெயர் பெற்ற மலபார், கோரமண்டல் கரையோரப் பகுதிகளினதும், இலங்கைத் தீவினதும் உண்மையானதும், துல்லியமானதுமான விபரங்கள்" என்பது ஒல்லாந்த மொழியில் அவர் எழுதிய நூலின் தலைப்பின் தமிழாக்கம். பல்தேயஸ் பாதிரியார் யாழ்ப்பாணத்திலேயே எட்டு ஆண்டு காலம் வாழ்ந்தவர்.

யாழ்ப்பாண பகுதி முழுவதற்கும் பொறுப்பான மதபோதகர் என்ற செல்வாக்குள்ள பதவி காரணமாக உயர் அதிகாரிகளோடு நேரடித் தொடர்புகளை வைத்துக்கொண்ட ஒருவராக இருந்தார். தமிழ் மொழியைக் கற்றுச் சரளமாக அம்மொழியைப் பேசக் கூடியவராகவும் இருந்ததால், அப்பகுதி மக்களோடும் நெருங்கிப் பழகியவர். அத்துடன், அக்கால வரலாற்று நிகழ்வுகள் பலவற்றோடு அவருக்கு நேரடித் தொடர்புகளும் இருந்தன. எடுத்துக்காட்டாக, பல்வேறு நகரங்கள் மீதான ஒல்லாந்தரின் படை நடவடிக்கைகளின்போது, பல்தேயசும் உடன் சென்றிருந்தார். இதனால், அவரது நூலில் காணப்படும் பல தகவல்கள் அவரது நேரடியான அனுபவங்களினூடாகக் கிடைத்தவை இது யாழ்ப்பாணம் தொடர்பாக அவர் தரும் தகவல்களுக்குக் கூடுதல் பெறுமதியைத் தருகின்றது. எனினும், அவர், குறித்த ஒரு சமயத்தின் மதபோதகர் என்ற வகையில் அவரது கருத்துக்களும், வேறு சில தகவல்களும் பக்கச் சார்பானவையாக இருக்கவும் வாய்ப்புக்கள் உண்டு.

### பல்தேயசின் வரலாறு

பல்தேயஸ் 1632 ஆம் ஆண்டில் ஒல்லாந்து நாட்டில் உள்ள "டெல்வ்ட்" (னுநடகவ) என்னும் நகரத்தில் பிறந்தார். இவர் நான்கு வயதுக் குழந்தையாக இருக்கும்போதே தனது தாய் தந்தையர்களை இழந்து உறவினரின் பராமரிப்பில் வளர்ந்தார். தத்துவம், இறையியல் ஆகியவற்றைக் கற்றுப் பட்டம் பெற்ற பல்தேயஸ், 1654 ஆம் ஆண்டில் ஒல்லாந்தச் சீர்திருத்த திருச்சபையில் ஒரு மதகுருவாக நியமனம் பெற்றதுடன், அவ்வாண்டிலேயே திருமணமும் செய்துகொண்டார். அதே ஆண்டில் மதபோதனை செய்வதற்காக பல்தேயசை கிழக்கு நாடுகளுக்கு அனுப்பத் திருச்சபை முடிவு செய்தது. 1654 இல் தனது மனைவியுடன் ஒல்லாந்திலிருந்து புறப்பட்ட பல்தேயஸ் 1655 இல் பத்தேவியாவை அடந்தார். சில மாதங்களில் அவரது மனைவி



பல்தேயஸ் பாதிரியாரின் நூலின் தலைப்புப் பக்கம்

இறந்துவிட்டார். 1656 இல் பல்தேயஸ் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். 1658 சனவரியில் மன்னார், தூத்துக்குடி, யாழ்ப்பாணம், நாகபட்டினம் ஆகிய நகரங்களைக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கைகளின்போது அப்படைகளின் மதகுருவாக பல்தேயஸ் கடமையாற்றினார். இப்படை நடவடிக்கைகள் குறித்து அவர் தனது நூலில் விபரமான தகவல்களைத் தந்துள்ளார். இவற்றின் முடிவில், யாழ்ப்பாணத்துக்கு வந்த பல்தேயஸ் யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான மதபோதகராகப் பணியேற்றார். யாழ்ப்பாண மக்களுக்கு ஒல்லாந்த மொழியைக் கற்பித்து அதனூடாக அவர்களுக்கு மதபோதனை செய்வதிலும் பார்க்க, மத போதகர்கள் உள்ளூர் மொழியைக் கற்று அதனூடாகப் போதனை செய்வது நிச்சயமானதும், செயற்றிறன் மிக்கதுமான வழி என பல்தேயஸ் நம்பினார். இதனால் அவர் தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டினார். யாழ்ப்பாணத்தில் இருந்தபோது, மாணவர்களின் தேவைக்காகப் பல சமய நூல்களை இவர் ஆக்கியுள்ளார். இந்நூல்கள், போர்த்துக்கேய மொழியிலும், தமிழிலும் பதிப்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. காலப்போக்கில், அரசாங்க அதிகாரிகளுக்கும், பல்தேயசுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக பல்தேயஸ் நாடு திரும்பினார். இதன் பின்னர் ஆறு ஆண்டுகள் மட்டுமே அவர் உயிர் வாழ்ந்தார். ஒல்லாந்தில் வாழ்ந்த காலத்திலேயே முன்னர் குறிப்பிட்ட நூலை அவர் எழுதினார். 1672 ஆம் ஆண்டில் இது வெளியானது.

### பல்தேயசின் நூல்

இவரது நூல் ஏறத்தாழ 900 பக்கங்களைக் கொண்டது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்நூலின் 248 பக்கங்களைக் கொண்ட இரண்டாம் பகுதியே இலங்கையைப் பற்றியது. இதில் யாழ்ப்பாணம் தொடர்பான விபரங்கள் ஏறத்தாழ 40 பக்கங்களில் தரப்பட்டுள்ளன. பல நிலப்படங்களும், விளக்கப் படங்களும் இப்பகுதியில் அடங்குகின்றன.

யாழ்ப்பாணக் கோட்டை மீதான முற்றுகை, ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை கைப்பற்றப்பட்டமை, யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த போர்த்துக்கேயப் படைகள் சரணடைந்தமை, ஒல்லாந்தருக்கு எதிரான சதி, சதியில் ஈடுபட்டோருக்கான தண்டனைகள் போன்றவை நூலில் விபரமாகத் தரப்பட்டுள்ளன. மேற்படி விடயங்கள் பற்றி இத்தொடரின் முந்திய கட்டுரைகளில் கூடுதலான தகவல்களைப் பார்த்தோம். இவை தவிர, ஒல்லாந்தர் காலத்தின் முதற் பத்தாண்டில் மதம் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள், ஒல்லாந்தரின் மதத்தைப் பரப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், அதற்கான கட்டமைப்பு, யாழ்ப்பாணப் பகுதியில் இருந்த பல்வேறு தேவாலயங்கள் போன்றவை தொடர்பான விபரங்களும் நூலில் காணப்படுகின்றன. தமது மதம் தவிர்ந்த ஏனைய மதங்களுக்கு எதிராகக் கடும்போக்கை ஒல்லாந்தர் கடைப்பிடித்தபோதும், ஒல்லாந்தரால் இந்தியாவில் இருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்ட நெசவாளர்கள் இந்து சமயம் தொடர்பான செயற்பாடுகளில் வெளிப்படையாக ஈடுபடுவதை அரசாங்கம் கண்டும் காணாமல் விட்டது குறித்து பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட எல்லாத் தேவாலயங்களினதும் விபரங்களும், படங்களும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. தேவாலயங்களின் அமைப்பு அங்கிருந்த வசதிகள், தேவாலயத்துக்கு வரும் மக்களின் எண்ணிக்கை, அவற்றோடிணைந்த பாடசாலைகளில் படிக்கும் மாணவர் தொகை போன்ற விபரங்கள் நூலில் உள்ளன. படங்கள் அக்காலத் தேவாலயங்களை நேரடியாகப் பார்த்து வரையப்பட்டவையா அல்லது பல்தேயசின் விபரிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கற்பனையில் வரையப்பட்டனவா என்பது தெரியவில்லை.

இவற்றுடன் யாழ்ப்பாண மக்களின் சாதியமைப்பு, பல்வேறு சாதிகள், கைவினைஞர்கள் பற்றிய விபரங்கள், தொழில்கள், பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்கம், பிற இயல்புகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பான தகவல்களையும் நூல் தருகின்றது. யாழ்ப்பாண மக்களின் சில அன்றாடச் செயற்பாடுகளைக் காட்டும் படங்களையும் நூலில் காண முடிகின்றது. எனினும் இவற்றின் நம்பகத் தன்மை குறித்துத் தெளிவில்லை. சில படங்களில் உள்ள முகங்களில் ஆபிரிக்கச் சாயல் தென்படுகின்றது. பெண்கள் தயிர் கடைவதைக் காட்டும் படத்தில் அவர்கள் உடம்பின் மேற்பகுதியை மூடாமல் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்துவதற்கான வேறு தகவல்கள் இல்லை.


பல்தேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள யாழ்ப்பாணத்து ஆண்கள் இருவர் உரையாடுவதைக் காட்டும் படம்

சுவடுகள் தொடரும்...

# சீனா – இந்தியா விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு ஆசிய நூற்றாண்டுக் கனவை நிர்மூலமாக்குமா?

- ஐ.வி. மகாசேனன் -



**2020** ஆரம்பத்திலிருந்தே உலகம் ஓர் பதட்டத்துடனேயே அரையாண்டைக் கடந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்று உலகை மரண ஓலங்களில் நிலைநிறுத்தியது. கொரோனா வைரஸ் தொற்றுக் கட்டுப்படுத்த முடியாத சூழலில் மரண ஓலங்களின் நடுவே உலகம் கொரோனாவோடு வாழப்பழகிக் கொண்டது. கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ள அரசியல், பொருளாதாரத் தாக்கங்களை உலகம் தற்போது அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளது. கொரோனாவிற்கு பின்னரான உலக ஒழுங்கு, ஆசியாவின் நூற்றாண்டு என்பதை உறுதி செய்துவிடுமோ என்ற அச்சம் அமெரிக்காவைச் சூழ்ந்துள்ளது. அந்த அச்சத்தின் விளைவாய் தான் இந்தியா - சீனா எல்லை முரண்பாட்டில் இந்தியாவிற்கு உதவி என்ற பேரில் நுழைந்து இந்தியாவையும், சீனாவையும் போர் வலயமாக்கி, இருநாடுகளையும் அமெரிக்கா முடக்க நினைக்கிறதா? என்ற ஐயப்பாடு சர்வதேச ஆய்வாளர்களிடையே உருவாகியுள்ளது.

உலக ஆதிக்கம் என்பது நிலையான சொத்தல்ல. அது நூற்றாண்டுகளில் மாறி மாறி நிலை பெற்றுள்ளது. நாடுகாண் பயணங்கள் வரையில், நாடுகளுக்கு இடையில் ஆதிக்க உணர்வுகள் பரவலாகக் காணப்படாமையால் உலக ஆதிக்கச் சிந்தனை எழுச்சியுறவில்லை. நாடுகாண் பயணங்களின் வளர்ச்சி 16ஆம் நூற்றாண்டின் உலக ஆதிக்கம் ஐரோப்பாவை மையப்படுத்திப் பிரித்தானியர் வசம் சென்றது. 20ஆம் நூற்றாண்டில் உலகப்போர்கள் உலக ஒழுங்கை மாற்றி அமைத்தது. உலக ஆதிக்க சக்தியும், அமெரிக்கக் கண்டத்திற்கு நிலைமாறி அதன் ஆற்றலை அமெரிக்க தன்வசப்படுத்தியது. அந்தத் தொடரிலேயே இன்றைய 21ஆம் நூற்றாண்டு ஆசியாவின் வசமாகும் என்றும், அதன் ஆதிக்கச் சக்தியாக சீனா அல்லது இந்தியா காணப்படும் என்ற சிந்தனை முன்னரே அரசியல் ஆய்வாளர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதனை ஒடுக்கி ஆதிக்கத்தை 21ஆம் நூற்றாண்டிலும் தொடரவே அமெரிக்கா பெருமுயற்சி எடுக்கிறது.

21ஆம் நூற்றாண்டின் ஆசியாவின் வகிபாகம் தொடர்பான உரையாடலில் பிரதானமாக சீனா மற்றும் இந்தியா பற்றிய வளர்ச்சியே முதன்மை பெறுகின்றது. 1950களிலே உலகின் அரைப்பங்கிற்கும் அதிகமான மக்கள்தொகை ஆசியாவில் காணப்பட்ட போதிலும், மொத்த உற்பத்தியில் 20 சத வீதம் மாத்திரமே ஆசியாவிடம் காணப்பட்டது. எனிலும் 1980களின் பிற்பகுதியிலிருந்து இந்நிலை மாற்றமடைந்துள்ளது. 1988ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசின் தலைவர் டெங் சியா வோப்பிங் மற்றும் இந்தியாவின் பிரதம மந்திரி ராஜிவ் காந்தியும் சந்தித்த போது, 21ஆம் நூற்றாண்டு ஆசிய நூற்றாண்மை பெறலாயிற்று. எனிலும் அதற்கு முன்னரே 1985ஆம் ஆண்டில் அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழு 21ஆம் நூற்றாண்டை ஆசியாவின் நூற்றாண்டு என்ற உரையாடலை ஆரம்பித்து விட்டார்கள்.

கொரோனா அபத்தத்திலிருந்து சீனாவின் விரைவான மீட்சி, கொரோனா அபத்தத்தில் உலகு முடங்கியிருக்க, சீனாவின் பொருளாதார ஆதிக்கம் என்பன சீனா, கொரோனாவிற்கு பின்னரான உலக ஒழுங்கில் வல்லாதிக்க நிலைபெறும் என்பதே பல ஆய்வாளர்களின் முடிவாகவும் காணப்பட்டது. அதனை முடக்கவே அமெரிக்கா, சீனா மீது கொரோனா வைரஸ் தொற்றை உருவாக்கியவர்கள் என்ற கடுமையான சாடலை முன்வைப்பதுடன் அதற்கு ஆதரவாக ஓர் அணியையும் திரட்டியுள்ளது. தொடர்ந்து தென்சீனக்கடலில் சீனாவின் ஆதிக்கத்திற்கு கடுமையான எதிர்ப்பையும் காட்டியிருந்தது. போருக்கான ஆயத்தமாகத் தனது போர்க்கப்பல்களையும் அமெரிக்கா தென்சீனக்கடலிற்கு அனுப்பி இருந்தது. சகல விதத்திலும் சீனாவிற்கு எதிரான ஒரு அணையைக் கட்டுவதில் அமெரிக்கா மும்மரமாக உள்ளது.

சீனா ஒரு சோசலிச சர்வதிகாரத்தை கொண்ட நாடு என்பதால் அதனை அரசியல் சித்தாந்த ரீதியாகத் தாக்குவதன் மூலம் ஓர் பலமான அணியைத் திரட்டிச் சீனாவிற்கு எதிராகப் போரிடுவது என்பது அமெரிக்காவிற்கு ஒப்பீட்டிப்படையில் இலகுவான காரியமாகிறது. ஆயினும் இந்தியா ஒரு தாராள சனநாயக நாடு என்ற ரீதியில் அதற்கெதிராகக் கூட்டு உருவாக்கம் என்பது எளிதாக அமையப் போவதில்லை. தாராள சனநாயக பாசறையே இரண்டாகப் பிளவுற வேண்டிய தேவை காணப்படும். இதனடிப்படையில் எதிர்காலத்தில் இந்தியாவே அமெரிக்காவிற்கு அல்லது மேற்கிற்கு ஆபத்தான அரசாக இருக்கும் என்பதை அமெரிக்க மற்றும் மேற்குலகு முன்கூட்டியே உணர்ந்தே அதற்கு எதிராகச் செயற்பட விளைகிறது. இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விவகாரமும் அவ்வாறானதொரு முற்கூட்டிய பாதுகாப்புக் கொலையாக நோக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையிலேயே, சீனாவுடன் நேரடியாக மோதும் அமெரிக்கா, இந்தியாவுடன் கைகோர்த்து இந்தியாவை விழுத்துவதற்கான வியூகங்களை நகர்த்தி வருகிறது. சீனாவினை எதிர்த்து வெளியேறிய மேற்குலக நாடுகளின் பொருளாதார நிறுவனங்கள், சந்தைக்குரிய நிலமாக இந்தியாவினையே தேர்வு செய்துள்ளனர். சீனா வீழ்த்தப்படின் ஆசியாவின் ஆதிக்கச் சக்தியாக இந்தியா உருப்பெறும் என்பதையே சீனாவிலிருந்து இந்தியாவிற்கு நிறுவனங்கள் மாற்றம் பெற்ற நிகழ்வு வெளிப்படுத்துகிறது. இதனைக் கருத்திற்கொண்டே இந்தியாவினைக் கூடஇருந்து குழிபறிக்கும் செயற்பாடுகளை அமெரிக்க முன்னெடுத்து வருகிறது. இந்தோ - பசுபிக் மூலோபாயத்தின் பூகோள முக்கியத்துவத்தினடிப்படையில் உண்மையான எஜமானாக இருக்க வேண்டிய இந்தியாவை அதன் பாதுகாவலான அமெரிக்க பேணுவது அமெரிக்க இராஜதந்திரத்தின் உச்சகட்ட வெற்றியாகும்.

இன்று இந்திய - சீனா எல்லை முரண்பாட்டை அணையவிடாது பாதுகாப்பதிலும் அமெரிக்க வெற்றியையே பெற்று வருகிறது. இது இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளினதும் இராஜதந்திரத் தோல்வியாகும். புவிசார் அரசியல்ரீதியிலான இணக்கப்பாட்டைக் காணவேண்டிய இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு அரசுகளும் மோதுவதென்பது "21ஆம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு" என்பதைச் சிதைக்கும் நிகழ்வாகும். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுகள் பிரிவின் இயக்குநரும், தி இந்தியன் எக்ஸ்பிரஸின் சர்வதேச விவகாரங்களுக்குமான பங்களிப்பு ஆசிரியருமான சி.ராஜ்மோகன், "இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்தால் இந்த 21ஆம் நூற்றாண்டு ஆசிய நூற்றாண்டாகவோ, சீனா நூற்றாண்டாகவோ மாறும் வாய்ப்புக்கள் மேலும் அதனைச் சிக்கலாக்கும்" என்று நினைவுபடுத்தியுள்ளார். 21ஆம் நூற்றாண்டு ஆசிய நூற்றாண்டாகவோ, சீனா நூற்றாண்டாகவோ மாறும் வாய்ப்புக்கள் மேலும் சிக்கலாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அமெரிக்காவின் செயற்பாடுகள் அமைகிறது. இந்திய – சீன முரண்பாட்டை தவிர்க்க சமாதான பேச்சுவார்த்தையே சாதகமான முடிவு என்பதே பல ஆய்வாளர்களதும் கருத்தாக அமைகிறது. சீனா தொடர்பான விவகாரங்களில் நிபுணரான ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஸ்வரண் சிங், எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இரு நாடுகளும் போதுமான முயற்சிகளை எடுக்கவில்லை என்பது அண்மைச் சம்பவத்திலிருந்து தெளிவாகிவிட்டதாகவும், இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலமாகவே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் நம்புவதாக தெரிவித்துள்ளார். கடந்த 40 ஆண்டுகளாக, இந்தியாவும் சீனாவும் எல்லையில் அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் நிலைநாட்ட முயற்சித்தன என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். 2018 ஏப்ரல் முதல் தேதியில் இருந்து சீனாவின் வுஹான் நகரில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரண்டாவது முறையாக இருவரும் மீண்டும் சென்னை அருகே மாமல்லபுரத்தில் சந்தித்தனர். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், இரு நாடுகளின் தலைவர்களும் தங்கள் படைகளைச் சமாதானத்தை நிலைநாட்டும் வழியில் வழிநடத்துவதாக ஒப்புக் கொண்டனர். தற்போது சீனா மீது உலகமே மிகுந்த மனக்கசப்பு கொண்டிருப்பதாகக் கூறும் ஸ்வரன் சிங், தற்போதைய சூழ்நிலையில் எந்தவொரு போரையும் சீனா விரும்பாது என்று கூறுகிறார். எனவே, இந்தியாவுடனான உறவை சுமூகமாக்குவதைத் தவிர சீனாவுக்கு வேறு வழியில்லை என்று அவர் கருதுகிறார்.

எல்லையில் மோதலுக்கு தயாராகும் இராணுவத்தளபதிகள், வெளிவிவகார அமைச்சகங்கள் எனப் பலதரப்பட்ட பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு விட்டது. ஆயினும் சுமூகமான நிலை உருவாக முடியாது காணப்படுகிறது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் செல்வாக்குக் காணப்படுகிறமை தவிர்க்க முடியாத வாதமாகும். காரணம் இந்தியா மற்றும் சீனா எல்லைப் பிரச்சினையைப் பேச்சு பேச்சுவார்த்தையூடாகத் தீர்ப்பதற்கான மத்தியஸ்தத்தை ஆரம்பத்தில் அமெரிக்க வழங்குவதாக முன்வந்த போதிலும் சீனா மற்றும் இந்தியா ஆகிய இருநாடுகளுமே நிராகரித்திருந்தன. எனினும் ரஷ்யா வெளிவிவகார அமைச்சரின் மத்தியஸ்தத்தில் ஜூன்-23 இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் சீனா வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இதன் முடிவு சாதகமாக அமையாத போதிலும் அமெரிக்காவை புறக்கணித்து ரஷ்யாவுடன் இணங்கிச் செல்வது நிச்சயமாக அமெரிக்காவிற்கு சீற்றத்தையே ஏற்படுத்தும். ஜூன்-02ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோர் தொலைபேசியில் உரையாடி இருந்தனர். இரு தலைவர்களும் சீன-இந்திய எல்லைப் பதட்டங்கள் குறித்து விரிவாகப் பேசியிருந்தார். இதன் பின்னர் இந்தியா – சீனா விவகாரத்தில் இந்தியாவுக்கான ஆதரவுத் தளத்தில் அதிக ஈடுபாட்டுடன் அமெரிக்கா பயணிக்கத் தொடங்கியது.



இருவரும் கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளும் இந்தியாவிற்கான ஆயுத உதவிகளை வழங்க முன்வந்தன. பிரான்ஸிடமிருந்து ரபேல் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு இருநாடுகளுக்குமிடையிலே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ்விமானத்தின் தொழில்நுட்பம் தென்னாசியாவுக்குப் புதியதாகும். குறிப்பாக இதிலேயே அமெரிக்க தெளிவான இராஜதந்திர நகர்வை நகர்த்தி வருகிறது. இந்தியாவுக்கான ஆயுத உதவிக்கூடாக சீனா - இந்தியாவிடையே ஓர் போஉப் பதட்டத்தை நிலவச் செய்து இரு நாடுகளதும் பொருளாதார வளர்ச்சியையும் அமெரிக்க மற்றும் மேற்குலகு நாடுகள் தடுக்க முற்படுகிறது. கொரோனவிற்குப் பின்னரான உலக ஒழுங்கில் சீனா மற்றும் இந்தியா அரசுகளின் பொருளாதார வளர்ச்சியும், அதனை தடுக்கும் விதத்தில் இந்தியா – சீனா முரண்பாட்டை சீர்செய்ய முயலாது முரண்பாட்டை பெரிதாக்கும் அமெரிக்கச் செயற்பாட்டை இந்தியா நிதானத்துடன் ஆராய வேண்டியுள்ளது. இந்தியா மற்றும் சீனா புவிசார் அரசியல்ரீதியில் ஆசியாவின் பிரதான சக்திகளாகும். இத்தேசங்களின் முரண்பாடு புவிசார் அரசியல்ரீதியாகவே அணுக வேண்டும். அமெரிக்காவின் மூலோபாய உறவை இதனுள் இந்தியா அனுமதிப்பது என்பது சீனாவை முடக்குவது மாத்திரமின்றி இந்திய அரசு தன்னையும் முடக்கும் செயலாக அமைகிறது.



# நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியா ? தமிழ் மக்கள் தேசிய கூட்டணியா ?

- மாசிலான் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டதோ, அதன் அடிப்படை இலட்சியத்திலிருந்து முற்றாக விலகி , தமிழ் மக்களின் உரிமைகளை மறந்து , இந்திய அமெரிக்க விருப்பங்களை நிறைவேற்றும் நோக்கிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வந்துள்ளமையால், அதனைத் தமிழ் மக்களும் முற்றாக தேர்தலில் நிராகரிக்க வேண்டும் என்று சென்ற வாரம் பதிவிடப்பட்டிருந்தது..





அப்படியானால் அடுத்து இருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் எக்கட்சியைத் தமிழ் மக்கள் ஆதரிக்கலாம் என்று வினா எழுவது இயற்கையே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு பொதுப் பெயர் ..இரண்டாயிரத்து நான்கில் நடந்த தேர்தலில் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி,அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசு ,டெலோ,ஈபிஆர்எல்எப் ஆகிய நான்கினையும் இணைத்தே கூட்டமைப்பு என்று அழைக்கப்பட்டது.தனி ஒரு கட்சியின் பெயரில் அவ்வமைப்பு அழைக்கப்படவில்லை.இப்பொழுது அதில் பிளவுகள் ஏற்பட்டுச் சில பிரிந்து விட்டன. அதேநேரம் சில புதிய அமைப்புச் சேர்ந்து இயங்கினாலும் அது பொதுப் பெயரான கூட்டமைப்பு என்று தான் அழைக்கப்படுகிறது.ஆனால் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பது ஒரு பொதுப் பெயர் உள்ள அமைப்பு அல்ல.விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும்,அனந்தியின் சுயாட்சிக் கழகமும் ,டெலோவில் இருந்து பிரிந்த சிறி காந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோரின் அணியும், சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈபிஆர்எல்எப் கட்சியான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் போட்டியிடுகின்றன என்பதே உண்மையாகும். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பது பிரேமச்சந்திரனைத் தலைவராகக் கொண்ட ஈபிஆர்எல்எப் கட்சியின் பதிவு செய்யப்பட்ட பெயராகும்...ஆனால் இந்தக் கூட்டணியானது விக்கினேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி என்று முற்றிலும் தவறான ஒரு தோற்றத்தை மக்களிடம் காட்டுகிறார்கள்.இது ஒன்றே இவர்களின் அரசியல் நடவடிக்கையின் மேல் ஐயம் ஏற்பட வழி வகுத்துள்ளது.ஏன் இந்தப்பெயர் குழப்பம்?.இதற்கு என்ன காரணம்?.

ஊடகங்கள் கூட இது விக்கினேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி என்று ஏன் தவறாக எழுதுகின்றன? விக்கினேசுவரன் தனது கட்சியை அறிவித்து இரண்டு ஆண்டுகளாகக் கட்சியைப் பதிவு செய்யாமல் விட்டு விட்டுப் பிரேமச்சந்திரனின் கட்சியில் போட்டியிடுகிறார். இவ்வாறு தொடக்கமே மக்களை ஏமாற்றும் ஒரு கபட நோக்கம் கொண்டதாகவே இருக்கிறது.

இந்நான்கு கட்சிகளும் பிரேமச்சந்திரனின் கட்சியின் பெயரில் போட்டியிடாது ஒரு பொதுப் பெயரை நாடாதது ஏன்?இது பிரேமச்சந்திரனை வளர்ப்பதற்காக வெளிச்சக்தி ஏற்படுத்திக் கொடுத்த அழுத்தமா? என்ற ஐயம் எழுந்துள்ளது. பொதுப் பெயரில் தேர்தலில் நின்றிருக்கலாம்.அவ்வாறான பொதுப் பெயரைத் தேடாதது ஏன்?

அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற விருப்பத்தில் விக்கினேஸ்வரன் இருக்கவில்லை என்றும், தன்னை அரசியலுக்கு, அதுவும் மாகாண முதலமைச்சராக்குவதற்காகவே அழைக்கப்பட்டதாகவும் அவர் பல முறை கூறியுள்ளார். தனது ஓய்வு காலத்திலாவது இனத்தின் நலன் பற்றிய அக்கறை இல்லாமல் தானுண்டு தன் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உண்டு என்று தான் வாழ்ந்து வந்தார்.சம்பந்தன் தான் அவரை மாகாண முதல்வர் ஆக்குவதாகக் கூறி அழைத்து வந்தார். அப்பொழுதே கூட்டமைப்பானது எதற்காகத் தொடங்கப் பட்டதோ அந்தப் பாதையில் இருந்து பிறழ்ந்து சென்று விட்டது விக்கினேஸ்வரனுக்கு அது பற்றிய அக்கறை எதுவும் அப்போது இருக்கவில்லை. ஆனாலும் விக்கினேஸ்வரன் கூட்டமைப்பில் போட்டியிட்டு முதலமைச்சரானார். இந்த வெற்றியைக் கொடுத்தவர்கள் தமிழ் மக்கள்.மகிந்த அரசால் கொடும் துன்பப்பட்ட மக்கள் தமக்கு விக்கினேஸ்வரன், உயர் பதவியில் அதுவும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் நல்ல பணியாற்றுவார் என்று நம்பி வாக்களித்தனர். ஆனால் அவர் தனது பதவியேற்பையே மகிந்த முன்னிலையில் உறுதி எடுத்து ஏற்றுக்கொண்டதே தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு விழுந்த முதல் அடியாகும். தங்களின் வாக்குகளால் வென்றவர் ஏன் இங்கு ஒரு தமிழ் மகன் முன்னிலையில் தனது பதவி உறுதி மொழியை எடுக்கவில்லை என்று மக்கள் கவலையடைந்தனர். தனது நீதிபதிப் பதவியிலும் உயர்வானவரிடம் தான் உறுதி மொழி எடுப்பது என்று ஒரு தாழ்வு மனப்பான்மை அவரிடத்தில் இருந்த படியால் தான் அவ்வாறு செய்துள்ளார் . அது மட்டுமன்றி, பதவி ஏற்பு நிகழ்வில் தனது மகன்மார் , மருமகள்மார் , பேரப்பிள்ளைகள் ஆகியோருடன் தனது சம்பந்தி வாசுதேவ நாணயக்காரவுடனுமே பதவி உறுதி எடுத்துக் கொண்டார். யார் இந்த நாணயக்காரா ?.இவருக்கும் இந்தப் பதவி ஏற்புக்கும் என்ன தொடர்பு. ?சம்பந்தி என்பதை விட இவர் தமிழ் மக்களின் மேல் எவ்வளவு வெறுப்புக் கொண்ட மனிதர் என்பது உலகறிந்த விடயம். அப்படிப்பட்டவருடன் நின்று உறுதி மொழி எடுத்தது உண்மையில் இவருடைய மனத்தின் உள்ளக் கிடக்கையைக் காட்டுகிறது..அரசியலில் இது ஒரு பெரிய விடயமா? என்று சிலர் இதனைத் தட்டிக்கழிப்பார்கள்.ஆனால் இது ஒரு முக்கியமான விடயமே ஆகும்.

தமிழினத்தின் மேல் அக்கறை கொண்டு அரசியலுக்குள் வந்துள்ளதாக கூறி வரும் விக்கினேஸ்வரன் சில நாட்களுக்கு முன்னர், "பதவிக் காலம் முடிந்ததும் சென்று ஓய்வு எடுக்கவே விரும்பினேன்" என்று சொல்லியிருந்தார். அவர் அப்படிச் சொன்னதன் மூலம், அவர் தான் பதவிக்காகவே அரசியலுக்குள் வந்ததை ஒப்புக்கொள்கிறார்.

அவருக்குத் தமிழ் இனத்தின் மீது அக்கறை இல்லாமல் தான் இருந்துள்ளார் என்பது தானே உண்மை. அதைத் தான் அவரது கூற்று உறுதி செய்கிறது.அதாவது இவர் அந்தப் பதவியிலிருந்து விட்டு அமைதியாக மீண்டும் ஓய்வு வாழ்க்கைக்குச் சென்றுவிடலாம் என்று இருந்தவருக்குப் பதவி என்பது அபின் போன்று போதையை ஊட்டிவிட்டது. அதனால்தான் இப்போது புதிய ஒரு வடிவம் எடுத்து அரசியலில் தொடர்கிறார் போலும்! 2013 இல் முதலமைச்சரானவருக்கு கூட்டமைப்பின் தமிழ்த் தேசிய, தேசிய நீக்க அரசியல் புரியாமலே இருந்துள்ளது. பின்னர் 2015 பிப்ரவரி 03 இல் சம்பந்தனும் , சுமந்திரனும் வந்து அடுத்தநாள் சிறிலங்காவின் சுதந்திர நாள் நிழ்வுக்கு வருகிறீர்களா என்று அழைத்தபொழுதுதான் அவர்கள் தங்களின் தமிழ்த்தேசிய நீக்க அரசியலுக்குத் தன்னையும் சேர்க்க நினைத்ததை உணர்கின்றார். அதனால், அதில் தான் கலந்து கொள்ள மறுத்து விட்டதாகக் கூறுகிறார்.. அப்படியிருந்தும்,அவர் கட்சியிலும் பதவியிலும் தொடர்து இருந்தே வந்துள்ளார்.இவரது கட்சியினரே இவரின் மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொண்டு வந்தபோதும் சம்பந்தருடன் சமரசம் செய்து கொண்டு கட்சியில் பதவிக் காலம் முடியும் வரை இருந்தவர் பதவி முடிந்து அடுத்த நாள் புதிய கட்சியை அறிவித்து அனைவரையும் தனது கட்சியில்







வந்து சேருமாறு அழைப்பு விடுத்தார். ஆனால் இன்று தானே சென்று வேறொரு கட்சியின் தலைமையில் தேர்தலில் நிற்பது வேடிக்கையாகத் தெரியவில்லையா? இவர் இனப்படுகொலை என்ற தீர்மானத்தை மாகாண சபையில் நிறைவேற்றியவர் என்று கூறுகிறார்கள். உண்மைதான். ஆனால் இந்தத் தீர்மானத்தை சிவாஜிலிங்கம் முதலில் கொண்டு வந்த பொழுது அதில் சில வில்லங்கங்கள் இருக்கிறது என்று கூறி அதைக் கொண்டு வராமல் இரு தடவைகள் தடுத்து நிறுத்தியவர் தான் விக்கினேஸ்வரன். தடுத்திராவிட்டால் அது ஓர் ஆண்டுக்கு முன்னரே நிறைவேறியிருக்கும். தனக்கும் சுமந்திரனுக்கும் உச்சக்கட்ட மோதல் வந்த பின்புதான் அவர் அந்தத் தீர்மானத்தைத் தானே கொண்டு வருவதாகக் கூறிக் கொண்டு வந்தவர். இவ்வாறு முன்பு தடுத்து நிறுத்தி வைத்தவர் இப்பொழுது தானே கொண்டு வந்து நிறைவேற்றினேன் என்று கூறுவது தான் சுயலாப அரசியலாகும்.

விக்கினேஸ்வரன் தமிழ் மக்கள் பேரவையால் அரசியலமைப்பிற்குக் கொடுப்பதற்காக வரையப்பட்ட வரைவில் தேசம் என்ற சொல் இருப்பதை ஏற்க முடியாதென்றும், அதை நீக்க வேண்டும் என்று கூறி அச்சொல்லை நீக்க முனைந்தவர். தேசம் என்ற சொல் பிரிவினையைக் குறிக்கும்,அது பெரிய பிரச்சினையாகும் எனவே அந்தச் சொல்லை நீக்கியே ஆக வேண்டும் என்றவர் தான் விக்கினேஸ்வரன். ஆனால் அந்தச் சொல் ஏதோ புதிய சொல்லும் அல்ல, அது புலிகளின் சொல்லுமல்ல. அச்சொல் தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வாவினால் 1951 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ள சொல் என்று விளக்கம் கொடுத்தவர் கஜேந்திரகுமார் ஆவர்.இவ்வாறு தான் விக்கினேஸ்வரன் அரசியல் சென்றுள்ளது.இது மட்டுமல்ல முதலாவது "எழுக தமிழ்" நிகழ்வைத் தமிழ் மக்கள் பேரவை ஓர் எழுச்சியின் அடையாளமாகக் காட்டுவதற்கு முனைந்தது. அதனைத் தொடங்கி வைக்கவும் , தலைமை ஏற்கவும் விக்கினேஸ்வரனையே ஒழுங்கு செய்திருந்தார்கள்.ஆனால் அன்று கமுக்கமாக யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்ல அவர் ஆயத்தமானார். அவர் வருவார் தொடங்கி வைப்பார் என்று காத்திருந்த மக்கள் களைப்படைந்து போயினர் . காலை ஒன்பது மணிக்குத் தொடங்க வேண்டிய ஊர்வலம் இவரது செயலினால் பதினொரு மணியளவில் தான் தொடங்கியது. சிலர் அவரிடம் சென்று யாழ்ப்பாணத்தை விட்டுப் போக வேண்டாம். மக்கள் காத்திருக்கிறார்கள் வந்து தொடக்கி வைக்கவும் என்று கேட்டதன் பின்னரே அவர் வந்திருந்தார். இவ்வாறானவர் தான் விக்கினேஸ்வரன் .இவற்றைப் போல் ஏராளமாக எழுதிக்கொண்டே போகலாம்.இப்படியானவர் தமிழினத்திற்குத் தலைமை ஏற்கத் தகுதியுள்ளவரா? என்று சிந்திக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். இவர் யாருடன் கூட்டணி வைத்துள்ளார் என்று நோக்கினால் ஒருவர் பிரேமச்சந்திரன்.இன்னொரு பகுதியினர் அண்மையில் கூட்டமைப்பிலிருந்தும் டெலோவில் இருந்தும் பிரிந்த சிவாஜிலிங்கம் குழுவினராகும்.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கும் வரையும் கூட்டமைப்புச் சரியான வழியில் பயணிப்பதாகக் கூறிய பிறேமச்சந்திரனுக்குத் தேர்தல் தோல்வி கூட்டமைப்பின் பாதை தவறு என்று தெரிந்தது. அவர் என்றுமே பதின்மூன்று கூட்டல் என்று இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குள் தீர்வை ஏற்றுக்கொண்டவர்.அவர் முன்னர் ஒருபொழுதும் சமஷ்டித் தீர்வு பற்றிப் பேசியதே கிடையாது. இப்பொழுது தான் தேர்தலுக்காகச் சமஷ்டி என்று உச்சரிக்கிறார். மற்ற இருவருக்கும் சென்ற ஆண்டு வரை கூட்டமைப்புச் சரியாகப் பயணிப்பதாகத் தெரிந்திருந்தது. ஆனால் இப்பொழுது தான் கூட்டமைப்பின் மீது பழைய பழைய குற்றங்கள் தெரிகின்றது.எனவே கூட்டமைப்புக்கு எதிரான அணியைத் தொடங்கி இவ்வாறு கூறுகிறார்கள்.இதிலே வேதனையான ஒன்று என்னவென்றால் புலிகளைக் கேவலமாகத் திட்டி முன்பு ஈபிஆர்எல்எப் வெளியிட்ட நூலை அண்மையில் நடந்த அக்குழுவின் கூட்டத்தில் விக்கினேஸ்வரன் மீண்டும் வெளியிட்டு வைத்தார். அது என்ன புத்தகம் என்று தெரியாமலா அவர் அதை வெளியிட்டவர்.ஆனால் உச்ச நீதிபதியாக இருந்தவர் கூறுகிறார் தனக்கு அந்தப் புத்தம் என்னவென்றே தெரியாதாம். இது தான் அரசியலா ? அல்லது இது தான் அவரது அரசியல் ஆற்றலா ?தம்பி பிரபாகரன் என்று அடிக்கடி சொல்லிக் கூட்டம் பேசும் விக்கினேஸ்வரனுக்கு அந்தத் தம்பியை "இழித்து" வெளியிட்ட நூலையே தான் வெளியிட்டது தெரியாதாம். அது மட்டுமல்ல "தம்பி பிடிவாதமானவர். சர்வாதிகாரி போன்றவர் . அரசியலில் விட்டுக்கொடுக்க வேண்டும். ஆனால் அவர் விட்டுக்கொடுக்காமல் நடந்து கொண்டவர்." என்று குற்றம் சாட்டியவர் விக்கினேஸ்வரன் . விடுதலை வேண்டாம் என்று சொல்லி தலைவர் பிரபாகரன் விட்டுக்கொடுத்திருக்க வேண்டும் என்று கூறிவிட்டு, இப்பொழுது அவரைத் "தம்பி பிரபாகரன்" என்று அரசியல் இலாபத்திற்காக அடிக்கடி உச்சரித்து வருகிறார். இதே நேரம் அனந்தி தமது கூட்டணி பற்றிக் குறிப்பிடும் போது "இது நிரந்தரக் கூட்டணி அல்ல என்றும் ,தேர்தலுக்கான கூட்டணி என்றும் சொல்லுகிறார். அவரது அரசியலை இங்கு எடுத்து ஆராய வேண்டியதில்லை. ஆனாலும் அவா பற்றியதொரு விடயத்தை இங்கே குறிப்பிட்டு ஆக வேண்டும். விக்கினேஸ்வரன் கட்சி தொடங்கப்போகிறார் என்று தெரிந்திருந்தும். அவர் கட்சியை அறிவிக்க முன்னர் இவர் தனது கட்சியை அறிவித்தவர்.

அப்பொழுது அவருடன் இருந்தவர் மறவன்புலவு சச்சிதானந்தன் என்ற சிவசேனைத் தலைவர் என்பதைக் கவனித்தால் அதன் பின்புலத்திலுள்ள பல உண்மைகள் புலப்படலாம் அந்தக் கூட்டணியினர் சொல்பவற்றைக் கவனித்தால் இவர்களின் உண்மையான உருவம் புலப்படும். தமிழ் மண்ணில் மீனாட்சியின் கொடி பறக்க வேண்டுமாம். பாண்டியனின் மீன் கொடி பறக்க வேண்டுமாம். இதன் பொருள் என்னவென்றால் கரிகாலனின் புலிக்கொடி நீக்கப்பட வேண்டும் என்பது தான் இதன் உள்ளர்த்தம். இதனைத் தான் இந்தியா சொல்லிக் கொடுத்துள்ளது. மக்களிடம் இருந்து புலி நீக்க அரசியலை செய்யுங்கள். அதற்கு மீன் கொடி, மீன் சின்னம் பாண்டியப் பேரரசின் சிந்தனைகளை வளர்த்தீர்களானால் புலி எண்ணம் மெல்ல மெல்ல நீங்கி விடும். என்று. அதனையே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தற்பொழுது செய்யத் தொடங்கி உள்ளது. எனவே விக்கினேஸ்வரன் தலைமையிலான கூட்டணியைத் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய இரண்டும் நிராகரிக்கப்படுமானால் மக்கள் முன் உள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகும். இந்தக் கட்சியானது, 2010 இருந்து கூட்டமைப்பின் பாதை தமிழ்த் தேசியத்திற்கு எதிரானது என்று கூறி வருகின்றது.கூட்டமைப்பினர் இனப்படுகொலை என்று கூற மறுக்கிறார்கள். சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறி மக்களைக் கூட்டமைப்பு ஏமாற்றி வருகிறது. ஒற்றை ஆட்சிக்குள் சமஷ்டி இருக்கிறது என்று கூறி தமிழ்மக்களை ஒற்றை ஆட்சியை ஏற்க வழி காட்டுகிறது என்று மக்களுக்குக் கூறி வருகிறது தமிழ் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் ஆடம்பரம் இல்லாத நிதானமான தலைவராக காட்சி தருகிறார்.. தோல்விகளைக் கண்டு அவர் கவலைப் படவில்லை. மக்கள் உணரும் காலம் வரை அவர்களுக்கு எடுத்துக் கூறுவோம். மக்கள் அதனை உணர்ந்துகொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அவரது அரசியல் நகர்ந்து கொண்டிருக்கிறது. பேரனை இழுத்துத் தூற்றுகிறார்கள். அவர் அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அதேபோல் தனது தந்தை மாமனிதர் என்று கூறி அரசியல் செய்யாமல் பண்புடன் அரசியல் செய்கிறார் அவர். தமிழ் மக்களின் பிரச்சினையைச் சர்வதேச அளவில் அவர் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார். மக்கள் பிரதிநிதியாக இல்லாமலே அவர் துணிச்சலுடன் பல மட்டங்களில் தமிழ் மக்களின் பிரச்சினையை உலகிற்கு கொண்டு சென்றுள்ளார். அப்படிப்பட்டவர் மக்களின் பிரதிநிதியாகச் சர்வதேசத்திற்குக் கூறுவாரானால் அது மிகவும் பலமான மக்களின் கருத்தாகச் சர்வதேசமும் ஏற்றுக்கொள்ளும். ஆகவே இப்போதுள்ள அரசியல் தளத்தின் சூழ்நிலையைக் கவனத்தில் எடுத்தால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிப்பதே தமிழ் மக்களுக்கு உள்ள ஒரே வழியாகும்...

# யாசித்தே வாழும் நிரந்தர சூழலை உருவாக்குவதே பேரினவாத ஆட்சியாளரின் எண்ணக்கரு

- குருபார்வை -

ஓகஸ்ட் ஐந்தாம் திகதி நடைபெறப்போகும் பொதுத்தேர்தல் முடிவுகள் இந்த நாட்டில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவரும் என்பதே இன்று பலரதும் கருத்துரையாடல்களின் போதான பிரதான பேசு பொருளாக உள்ளது.

பரபரப்பின்றி நடந்து முடியப் போகும், நாட்டில் புதிய அரசு ஒன்றை தேர்வு செய்வதற்கான தேர்தல் நாட்டில் மாற்றத்தை கொண்டுவருமா? ஏற்றத்தை ஏற்படுத்துமா? அல்லது எப்போதும் போல ஏமாற்றத்தையே தக்க வைக்குமா? என்ற கேள்விகளுக்கான விடை ஆச்சரியத்தை ஏற்படுத்தும் ஒன்றாக அமையாது என்பது ஒரு போதே உட்கட்சி முரண்பாடுகளுடன் உடைவு நிலையை அடைந்து - அத்தேர்தலில் தோல்வியையும் சந்தித்து மிகவும் பரிதாபத்திற்குரிய பலவீன நிலையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக இயக்கமறச் செய்வதன் மூலம் அடுத்து வரும் ஆட்சிக் காலங்களை தொடர்ந்து தம்வசமாக்கி கொள்ள முடியும் என ராஜபக்ஷக்கள் முடிவெடுத்தமையானது, பொதுத்தேர்தலை உடனடியாக நடத்துவதற்கான நகர்வுகளை மேற்கொள்ள வைத்தது.

எதிர்காலத்தில் ராஜபக்ஷக்களின் ஆட்சி நீண்ட காலத்திற்கு தொடர வேண்டுமாயின் பலமான பிரதமரும் இரு வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருப்பின் நல்லாட்சியொன்றை இணக்கமான முறையில் தொடர்தல் என்பதும் பெருமளவு சாத்தியமான விடயமல்ல.

அதேசமயம் ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியை சார்ந்தவர்களாகவும், அக்கட்சியானது அதீத பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டதாகவும் இருந்தாலும் நாட்டின் அரச நிர்வாகத்தில் ஜனநாயகத் தன்மை என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கும்.

இன்று எங்கள் நாட்டில் அவசர அவசரமாக “கொரோனா” பேரிடர் அச்சத்துக்கு மத்தியிலும் பொதுத் மதத்தவரின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பது எழுதப்பட்ட ஒரு நிரந்தர விதியாகவே உள்ளதால், இந்த நாட்டின் மத மற்றும் மரபுசார் அனைத்துப் பிரச்சனைக்கும் சாதகமானதும், எதிர்பார்த்ததுமான தீர்வுகள் உடனடியாகவே பெரும்பான்மை இனத்தவஉக்குக் கிடைத்துவிடும் என்பதே யதார்த்தம். அதாவது நடைபெறப்போவது பௌத்த சிங்கள ஆட்சிதான். இதுவும் கூட அண்மைக்காலத்தில் வெளிப்படையாகவே - சிறுபான்மை சமூகத்தவரை நோக்கி சர்வ






பொதுவான கருத்தாக இருந்தாலும் கூட எதிர்பார்ப்பு என்ற ஒன்று இருப்பது தவிர்க்க முடியாததேயாகும்.

நாட்டின் சமகால அரசியல் சூழல் ஒன்றும் பெரியளவு இடியப்பச் சிக்கலானது அல்ல.

தென்பகுதி அரசியல் ஒரு தளத்திலும் - வடக்கு கிழக்குக் கள அரசியல் என்பது இன்னொரு தளத்திலும் மையம் கொண்டு இயங்கும் சூழலில், நாட்டின் ஆட்சிப் பீடத்தில் யார் அதிகாரத்தை கைப்பற்றும் தகைமையை பெறப் போகிறார் என்பதை தீர்மானிக்கும் சக்தியாகத் தென்பகுதி வாக்காளப் பெருமக்களே விளங்குகின்றனர்.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தென்பகுதி அரசியலில் - பிரதான கட்சிகளுக்குள் கருத்து முரண்பாடுகளும், பிளவுகளும், மோதல்களும் அதிகரித்துள்ள நிலையில், அங்கு பெரும்பான்மையின வாக்குகள் மட்டுமல்லாது அங்கு வசிக்கும் சிறுபான்மை இனத்தவர் வாக்குகளும் சிதறுண்டு போகும் வாய்ப்பு அதிகம் இருந்தாலும், தற்போது அதியுட்ச ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கும் “மொட்டுக்” கட்சியினர் என அறியப்படும் பொதுசன பெரமுனவினரின் “கை” மேலோங்கி இருப்பதாகவே அங்கிருந்து வரும் செய்திகள் உறுதி செய்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது செல்வாக்கை நிரூபித்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இருக்கையினை தனதாக்கிக் கொண்ட கோத்தாபய ராஜபக்ஷ அந்த வெற்றிப் பேராதரவுத் தளத்தினை மேலும் வலுவாக்கிக் கொள்ளும் திட்ட இலக்குடன் நாடாளுமன்றத் தேர்தலையும் உரிய காலத்திற்கு முன்னரே நடாத்தி முடிக்க தீர்மானித்ததில் ராஜதந்திர மூலோபாயம் அதிகளவிலேயே இருந்தது.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலின் எதிர்க்கட்சியொன்றை இல்லாமற் செய்வது அவசியமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் தொடர்ந்து வீழ்ச்சி காணக் கட்சித் தலைமைகளிடையே நிலவிவரும் அதிகாரப் போட்டியானது பிரதான காரணமாகி விட அக்கட்சி இரண்டாக பிளவுற்றமையானது ராஜபக்ஷக்களுக்கு அவர்களது நீண்ட காலத் திட்டம் சுலபமாக நிறைவேறுவதற்கான காலச் சூழலை விரைவாகவே உருவாக்கிக் கொடுத்தது.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்ட பிளவு என்பது ராஜபக்ஷக்களுக்கு சாதகமானதாக அமைந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது தென்பகுதி அரசியலின் ஜனநாயகச் சமநிலைத் தன்மையை அது கேள்விக் குறியாக்கி விட்டதாகவே கருதப்படுகிறது.

ஜனநாயக ஆட்சியில் வலுவான எதிர்க்கட்சி ஒன்றின் உறுதியான நிலை கொள்ளலே ஆட்சியில் உள்ள அரசின் அத்து மீறல் அதிகாரத்தை செயற்படவிடாது கட்டுப்படுத்தும்.

பலவீனமானதும் உறுதியற்ற தலைமை கொண்டதுமான எதிர்க்கட்சியால் ஆளும் கட்சியில் அதிகார துஷ்பிரயோகத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்தவும் முடியாது.

அதுவும் இங்கு நடைபெறும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையானது ஒரு முழுமையான ஜனநாயகத் தன்மை கொண்டதெனக் கூறமுடியாது. இங்கு அனைத்து அதிகாரமும் ஜனாதிபதி என்ற ஒரு தனி மனிதரிடம் குவிந்து இருப்பதால், இங்கு இயங்கும் பாராளுமன்றம் சுயமாக எந்த சட்டத்தையும் மக்கள் பிரதிநிதிகளுடைய ஆதரவுப் பலத்துடன் மட்டும் நிறைவேற்றி நடைமுறைப்படுத்துதல் சாத்தியமில்லை.

ஜனாதிபதியும், பாராளுமன்றத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் தேர்தல் ஒன்றை நடாத்தி முடிக்க ஜனாதிபதி பேரவாக் கொண்டிருப்பதன் காரணம், எதிர்க்கட்சிகள் பலவீனமான நிலையில் இருக்கும் போதே, அதாவது அதீத வெற்றி வாய்ப்புக்கான சூழல் இருக்கும் போதே பாராளுமன்றத்திலும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தனது கட்சியை ஆட்சியில் அமர்த்தி விட வேண்டும் என்ற பேரவாவேயாகும்.

இந்த மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலம் என்பது நாட்டின் அரசியல் யாப்பொன்றை தமக்கு தேவையான வகையில் புதிதாகவும், முழுமையாகவும் மாற்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை ஒரு முழுமையானதும் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகாரியாகவும் மாற்றி விட அவசியமானதாகும்.

இதற்காகவே எதிர்வரும் பொதுத் தேர்தல் பயன்படுத்தப்படவுள்ளது.

ஒருவேளை மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை தேர்தலில் கிடைக்காவிட்டாலும் கூட ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளுக்குப் பாராளுமன்றத்திலும் சாதகமான பதிலே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

பாராளுமன்றில் பலவீனமான, கருத்தியல் ஒருமைப்பாட்டுக்கு வரமுடியாத எதிர்க்கட்சிகளின் பிரசன்னம் என்பது எதனையும் அர்த்த பூர்வமாகச் சாதிக்கும் திறனற்றது என்பதே உண்மை.

அதற்கு இந்த நாட்டின் ஆட்சியியல் வரலாறே சிறந்த ஆதாராமாகும்.

எப்படியானாலும் நாட்டில் ஆட்சி பீடத்தை கைப்பற்றப் போவது பெரும்பான்மையினக் கட்சி ஒன்றின் அரசாங்கம் தான்.

யார் பதவியில் அமர்த்தாலும் பெரும்பான்மை இனத்தவரின் சாதாரணமாக எச்சரிக்கைத் தொனியில் கூறப்பட்டு வருவதும் தெரிந்ததே இதனை எல்லாவகையிலும் ஒரு முழுமையான பௌத்த சிங்கள நாடாக மாற்றும் பன்முக மூலோபாயங்களுடனான ஒரு ஆட்சி முறையையே அரசுக்கு ஆசி வழங்கி, ஆலோசனை கூறி நெறிப்படுத்தி வரும் பௌத்த தேரர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

சிறுபான்மை இனத்தவர்களை, உரிமைக்காகவல்ல... வெறுமனே சலுகைகளுக்காக பெரும்பான்மை இனத்தவரிடம் யாசித்தே வாழும் நிரந்தர சூழலை உருவாக்குவதே பேரினவாத ஆட்சியாளரின் எண்ணக்கரு என்பதால் தேர்தலுக்கு முன்னரே தேர்தலின் பின்னர் அரசு மேற்கொள்ளப் போகும் தீவிரமானதும், சிறுபான்மையினத்தவரின் அபிலாஷைகள் அனைத்தையும், சட்டம் உட்பட அனைத்து நிர்வாக கட்டமைப்புகளுடாகவும் கட்டுப்படுத்தி, ஒடுக்கும் இலக்கினை கொண்டதுமான நகர்வுகளை முன்னெடுக்க ஆரம்பித்து விட்டது.

ஆனால் அரசின்- உள்நோக்கம் அதன் செயற்பாட்டுப் பொறிமுறைகள் அனைத்தையும் தெரிந்து கொண்டும் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்காது புறந்தள்ளிவிட்டு கட்சிசார் சுயநல அரசியல் நலன்களுக்காக தமிழீழத் தேசியத்தை உதட்டளவில் மட்டும் உச்சரித்துக் கொண்டு அதனை நீர்த்துப் போகச் செய்யும் செயற்பாடுகளில் சகல தளத்திலும் சர்வதேச அயலக மற்றும் தேசிய மேலாதிக்க சக்திகளின் விருப்பார்வத்தை யதார்த்தமாக்க இயங்கி வரும் தமிழர் தரப்பு தலைமைகள் தேர்தலுக்கு பின்னர் எத்தகைய செயற்பாட்டை முன்னெடுக்கப் போகிறார்கள்? இதுவே இப்போதைய பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான கேள்வி!

# ரணங்கள் ஆறாத கறுப்பு யூலை

-செம்பருத்தி -



அன்பு , கருணை, காருண்யம் என்று கூறிக்கொண்டு முடி துறந்து, தனது மனைவி பிள்ளையைப் பிரிந்து துறவு பூண்டு வாழ்ந்தவர் சித்தார்த்தர். அவர் வன்முறையை வெறுத்தவர்,அன்புதான் உலக மகா சக்தி என்று கூறி வாழ்ந்தவர். போரால் ஏற்படும் மனிதப் பேரவலம் குறித்து அசோக மன்னரிடம் எடுத்துரைத்த புத்த துறவிகள் , “போரில் குருதி வழிந்தோடும்,சதைப் பிண்டங்கள் சிதறும் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவர். எனவே போர் வேண்டாம்,” என்று வேண்டிக்கொண்டனர். ஆனால் அசோகன் போரை நடத்தினான். போரில் வெற்றியும் கண்டான். ஆனால் அந்த வெற்றியை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. “புத்த துறவிகளின் சொல்லைக் கேட்காமல் மனித உயிர்களைக் கொன்று பாவத்தைத் தேடிக் கொண்டேனே!” என்று மனம் நொந்தான். புத்த மார்க்கத்துக்கு மாறினான். தனது மகன் மகிந்தனையும், சங்கமித்திரையையும் புத்த மார்க்கத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இது வரலாறு ..புத்த மத மார்க்கத்தைப் பரப்புவதால் உலகில் அன்பும் , சகோதரத்துவமும் செழிப்புறும் என்று அசோகன் நம்பினான்.

அந்த நம்பிக்கைக்கு மாறாகப் புத்த மதக் கோட்பாடுகள் இலங்கைத் தீவில் அன்பையும் , காருண்யத்தையும் நிலை நாட்டுவதற்குப் பதிலாக வெறுப்பையும், கொடூர சிந்தனையையுமே வளர்த்துள்ளது என்பதே வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது.

எல்லாளனை வென்ற துட்ட காமினி கூடத் தான் வெற்றி கொண்ட வீரனுக்கு நினைவிடம் எழுப்பி அதனருகில் செல்பவர்கள் இறங்கி மரியாதை செய்ய வேண்டும் என்று கூறியதாக வரலாறு கூறுகிறது. இதன் உண்மைப் பொருள்கூறுவது என்னவென்றால், மன்னர்கள் போரிட்ட போதும் இன,மத முரண்பாடுகள் அன்று இருந்ததில்லை என்பதாகும். ஆனால் வரலாறு மாற்றப்பட்டு, இன மத வேறுபாடுகள் பின்னாளில் வளர்க்கப்பட்டுக் கொண்டே வந்து, இன்று இன அழிப்பு என்ற நிலைக்குள் நாடு சென்று விட்டது.அதற்குத் தலைமை தாங்குபவர்களில் புத்தத் துறவிகளும் அடங்குவர் என்றால் அது வியப்பாக இருக்கும். ஆனால் அது தான் உண்மையாகும்.

1956,1958,1977 1981 1983 ஆகிய ஆண்டுகளில் இந்தத் தீவிலே தமிழ் மக்கள் மேல் திட்டமிட்டுத் தாக்குதல்கள் நடத்தப் பட்டன.இதைச் சிலர் இனக்கலவரம் என்றே இன்றும் கூறி வருகின்றனர்.உண்மையில் இவை இனக்கலவரங்கள் அல்ல. தமிழ் இனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்புத் தாக்குதல்களேயாகும். 1956 இல் தொடங்கிய இத்தாக்குதல்கள் ஒவ்வொரு முறையும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் தொடங்கிய இத்தாக்குதல்கள் ஜே ஆர் ஜெயவர்த்தனா ஆட்சிக் காலத்தில் தான் அதி உச்சம் பெற்றது.ஜே ஆர் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று , 1977 இல் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற சில நாள்களில் நாடு முழுவதும் தமிழ் மக்கள் மீதான கொலை வெறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆண்டில். யாழ்ப்பாண நகரமும் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டது. மிகப் பழமையான யாழ்ப்பாணச் சந்தையும் காவற்றுறையினரால் தீயிடப்பட்டது. இவற்றைப் பார்வையிடச் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களைக்குறி வைத்து மருத்துவ மனை வீதியில் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. நல்வாய்ப்பாக உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை.இதன் பின்னர் 1981 இல் மலையகத்திலும் முதன் முறையாக இனப்படுகொலைகளும், தமிழ் மக்களின் சொத்துகளும் அழிக்கப்பட்டன. இவை தான் தமிழ் இளைஞர்களின் எழுச்சிக்கு கால்கோள் இட்ட வன்முறைகள் ஆகும். இதைத் தான் விடுதலைப் புலிகளின் தலைவர் குறிப்பிட்டு “ஜே ஆர் உண்மையான புத்த மதத்தைப் பின்பற்றுபவராக இருந்தால், தான் ஆயுதம் ஏந்த வந்திருக்காது” என்று கூறியிருந்தார். தர்மிஷ்ட ஆட்சி அதாவது தர்மத்தின் ஆட்சி என்று கூறிக்கொண்டு தமிழ் இளைஞர்களை வேட்டையாடுவதற்காக ஜே ஆர் பயங்கரவாதச் சட்டம் என்ற கொடுமையான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறை வேற்றினார். அது இன்றும் தமிழ் மக்களுக்கு எதிரான வகையிலேயே பயன்படுத்தப் பட்டு வருகிறது. இவ்வாறான கடுமையான , கொடுமையான



சட்டங்கள் மூலம் தமிழ் மக்களின் எழுச்சியை ஆயுதம் கொண்டு அடக்கி வந்த நிலையில் தான், 1983 ஜூலை 23 அ ன்று இரவு திருநெல்வேலியில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தை வைத்துத் தமிழ் மக்களின் எழுச்சியை அடக்கி விடலாம் என்ற ஜே ஆர் இன் எண்ணம் மேற்படி தாக்குதலால் சிதறடிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட இனவெறித் தாக்குதல்களில் 1983 இல் நடைபெற்ற தாக்குதல்களே மிக மோசமாமான தாக்குதல்களாகும். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் முதன் முறையாகக் கொழும்பு கனத்தைக்குக் கொண்டு செல்லப்பட்டு, மக்களுக்கு ஒரு வெறியை ஏற்படுத்தித் தமிழ் மக்களின் மேல் தாக்குதலை மேற்கொள்ள வழி ஏற்படுத்தினர். அது உண்மை தான் என்றாலும் அதற்குள் இன்னொரு சதித் திட்டமும் இருந்தது என்பதே உண்மையாகும். அதற்கு முன்னரே தமிழ் மக்களைத் தாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. வாக்களர் இடாப்பில் தமிழர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு இருந்தது. அந்தத் திட்டத்திற்கு இந்தத் திருநெல்வேலித் தாக்குதல் சாட்டாக அமைந்து விட்டது. ஜே ஆர் இன் அரசு வானொலி மூலமும் , தொலைக்காட்சி மூலமும் இவ்வன்செயலை ஊக்குவித்துச் சிங்களப் பகுதிகள், மலையகம் எங்கணும் பரவச் செய்தது. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டியும் , குத்தியும் நெருப்பில் போட்டும், எரித்தும் கொலை செய்யப்பட்டனர்.இது இனக்கலவரம் என்றால் ஒரு சிங்கள உயிராவது போயிருக்க வேண்டுமே ? அப்படி எதுவுமே நடக்கவில்லை.. எனவே தான் இதனை ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை எனக் கூறுகிறார்கள். அதேநேரம் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் கோடி சொத்துகள் எரித்தும் , கொள்ளையடித்தும் நாசம் செய்யப்பட்டன.கொழும்பு நகரில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வணிக வளாகங்கள் நான்கு - ஐந்து நாள்களாக எரிந்து கொண்டே இருந்தன என்பதே இதன் நோக்கம் இது திருநெல்வேலித் தாக்குதலுக்கான எதிர் வினை என்பதை நிராகரிக்கின்றது.அது மட்டுமா ? அரச சிறையில் இருந்த தமிழ்க் கைதிகள் ஐம்பத்திரண்டு பேர் அநியாயமாகக் . கொல்லாப்பட்டார்களே! இது திட்டமிட்ட இனவழிப்புப் படுகொலை அல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும். இந்த இனவழிப்பு நடந்தது 1983 ஜூலை ஆடித் திங்களில் என்பதால் தான் இந்தத் திங்களைக் “கறுப்பு ஆடி” என்றோ , “கறுப்பு ஜூலை” என்றோ குறிப்பிடுகின்றனர். அந்த இழப்புகள் மனதில் நீங்காத துயரை எற்படுத்தியதால்தான் இது கறுப்பு ஜூலை என்றோ கறுப்பு ஆடி என்றோ அழைக்கப்பட்டுகின்றது. இதை உலகம் எங்கணும் வாழும் தமிழர்கள் ஆண்டு தோறும் நினைவு கூர்ந்து வருகிறார்கள் இந்தக் கறுப்பு ஆடி அல்லது ஜூலையை மக்கள் நினைவுகூர்ந்து கொள்ளும் இவ்வேளையில் தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் “ தமிழர் வழி வன்முறை என்றால் , பதிலடியும் வன்முறையே“ என்று ஓங்கி ஒலித்திருக்கிறார். “தேசத்தைக் காத்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாகவே தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கை வைக்க வேண்டி வந்தது. தமிழர்கள் வன்முறையை நாடினால், வன்முறை தான் பதில் என்பதற்கு கறுப்பு ஜூலை சாட்சி” என்று மேலும் கூறியுள்ளார் . அவரது இந்தக் கூற்று முற்றிலும் உண்மைக்கு மாறானது. ஏனென்றால் இதற்குப் பின்னர் ஏராளமான பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர். ஆனால் பதிலுக்கு எதுவும் நடைபெறவில்லையே. இதனால் தான் இந்த ஜூலை வன்செயல் திருநெல்வேலித் தாக்குதலினால் ஏற்பட்ட எதிர்வினை அல்ல என்று ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஜே ஆர் அரசின் தொடர் தாக்குதல்களான 1977, 1981 இனவழிப்பின் தொடர்ச்சியே 1983 தாக்குதலும் ஆகும். ஆனால். தமிழ் மக்கள் வன்முறையை நாடினால் சிங்கள மக்களும் பதிலுக்கு வன்முறையை நாடுவார்கள் என்று எச்சரித்துள்ள ஓமல்பே சோபித தேரர் கூறிய கூற்றை முக்கியமாக நாம் கவனிக்க வேண்டும். ஆனால், தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக அறவழியில் ஆயுதமற்ற போராட்டத்தை தெரிவு செய்து முப்பதாண்டுகளாகப் போராடினார்கள். அந்த போராட்டங்கள் ஆயுத முனையால் அடக்கப்பட்டன என்ற விடயத்தைத் தேரர் மறந்து விட்டார். 1956 முதல் 1976 வரையான காலப் பகுதியில் அறவழியிலேயே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியில் தரப்படுத்தல் முறை கொண்டு வரப்பட்டதால் , நொந்துபோயிருந்த மாணவர்கள் எழுச்சிப் பேரணிகள் நடாத்தித் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். அதன் பின்னர் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டைக் கொழும்பில் நடத்தித் தான்கொண்டுவந்த குடியரசு யாப்பின் கீழ் தமிழ் மக்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டதை மூடி மறைக்க எடுத்த சிறிமாவோவிவின் முயற்சிகள் வெற்றி அளிக்காத நிலையில், மிகவும் எழுச்சியுடன் கோலாகலமாக யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான 1974 சனவரி 10 ஆம் நாள் காவற்றுறையின் வெறித்தனத்தால் ஒன்பது உயிர்கள் பறிக்கப்பட்டதுமான நிகழ்வுகளே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தனவே அன்றி ஆயுதத்தின் மேல் கொண்ட விருப்பால் அல்ல என்றதனையும் தேரர் கருத்திக் கொள்ள வேண்டும். எனவே ஆட்சியாளர்களே தமிழ் மக்களை ஆயுதம் ஏந்தத் தூண்டினார்கள் என்பதை சோபித தேரர் புரிந்துகொள்ள வேண்டும். இது தான் படிப்படியாக வளர்ந்து கொண்டு வந்தது. ஆட்சியாளர்களின் ஆயுத அடக்குமுறையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். ஆனால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதால் தான் தமிழர்களைக் கொன்று குவித்தோம் என்றும் இனிமேலும் அதுவே பதிலாக இருக்கும் என்று புத்தரின் அகிம்சை வழியைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் தேரர் ஒருவர் கூறியிருப்பது , வருத்தத்திற்குரியதே.

1983 தொட்டு 2009 வரை எந்த இனவழிப்பு நடவடிக்கைகளும் நடைபெறவில்லை என்பது மட்டுமல்ல இவ்விதமான குரல்களும் ஓங்கி ஒலிக்கவில்லை. எப்போ ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதோ, அதற்குப்பின்னரேயே தமிழ் மக்கள் மீது இன ஒடுக்குமுறைகளும், அடாவடித்தனங்களும் அதிகமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

உண்மையில் இதுபோன்ற இனவழிப்புத் தான் முன்னரும் ஆயுதப் போராட்டத்தின் துரித வளர்ச்சிக்கு வித்திட்டது. இனிமேல் ஆயுதம் தான் தமிழினத்திற்குப் பாதுகாப்பு என்று நினைக்க வைத்ததும் இது போன்ற முன்னெடுப்புகளே. சோபித தேரர் கூறிய வன்முறைக்கான பதில் இங்கே தான் இருக்கிறது. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட வளர்ச்சி தமிழ் மக்களைத் தாக்கலாம் , கொல்லலாம் என்று இருந்த நிலையை முற்றிலும் மாற்றிவிட்டது. நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்ட போதும் சரி ஆயிரக்கணக்கான படையினர் கொல்லப்பட்டபோதும் சரி சிங்கள மக்கள் தமிழ் மக்களின் மேல் எந்தவித தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை. இது தான் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். இதை ஓமல்பே சோபிததேரரும் நன்கு அறிவார்.

“ஜே ஆர் உண்மையான பௌத்தராக இருந்தால் தான் ஆயுதம் ஏந்த வேண்டி வந்திருக்காது,” என்ற கூற்றும், “எதிரியே தான் என்ன ஆயுதத்தை நான் ஏந்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறான்.” என்ற கூற்றும் உலகிற்கு உண்மையைச் சொல்லிக்கொண்டிருக்கும் வரிகளாகும். இதுவே யதார்த்த நிலையாகும். தமிழ் இளைஞர்களின் இந்த நிலையைத் தெரிந்ததனால் தான் இரண்டாயிரத்து ஒன்பதுவரை அமைதியாக இருந்தவர்கள் ஆயுத மௌனிப்பு அல்லது போராட்டத் தோல்வி என்றே வைத்துக்கொண்டு, அப்போது கூறாத வரிகளைத் தேரர் கூறியிருப்பது விந்தையல்ல.ஏன் சில நாள்களுக்கு முன்னர் இன்னொரு தேரர் வடக்குக் கிழக்கு இணைப்பு,சமஷ்டி என்று பேசினால் வடக்கில் குருதி ஆறு ஓடும் என்றும் கூறியிருந்தார்.இவை இன்று கூறக் கூடிய காலங்களே.உலக நாடுகளின் ஒருமித்த சதியினால் அவர்கள் இவ்வாறு கூறும் நிலை ஏற்பட்டுள்ளது.இதற்கான முழுப்பொறுப்பும் சர்வதேசமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாயிரத்து ஒன்பதில் தாங்கள் செய்த வரலாற்றுத் துரோகத்திற்கான தீர்வையும சர்வதேசமே காணவேண்டும்.




# அரசியல் குத்துக்கரணம்

வரவர வைரமுத்தரின் வாக்குக்கு எதிர்ப்பு அதிகரித்துவருவதாகச் சொன்னார்கள். உண்மை கசக்கத்தான் செய்யும். என்ன செய்வது. அதற்காக அதை மறைக்க முடியுமா? மக்களுக்கு அவற்றைச் சொல்லித்தானே ஆக வேண்டும். சொல்லாமல் விட்டால் அதைப்போல சமூகத் துரோகம் வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரண நாட்களிலேயே அரசியல்வாதி வாய் திறந்தால் உண்மை வராது. இது தேர்தல் காலம். எனவே முன்பு பேசுவதில் 20 சத வீதம் உண்மை என்றால். தற்போது அதுவும் இருக்க வாய்ப்பிருக்காது என்றே அடியேன் சொல்லுகிறேன். தற்போது இரண்டு முக்கியமானவர்கள் இரண்டு முக்கிய விடயங்கள் பற்றிப் பேசி இருக்கின்றனர். அதில் ஒருவர் மாவை. மற்றையவர் சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு மங்களராமய அம்பிட்டிய சுமணரத்ன தேரர். இருவரும் பல்டி அடிப்பதுபோல இருவிடயங்களைச் சொல்லி இருக்கின்றனர். இந்த விடயத்தில் மாவை சொன்னதைவிட அம்பிட்டிய தேரர் சொல்வதை கொஞ்சமாவது நம்பலாம். அவர் நடந்ததைத்தான் சொல்லுகிறார். ஆனால் மாவை சொல்வது ஆருடம்.சில வேளைகளில் நடக்காதும் போய்விடலாம். மாவைக்கு இதுபோன்ற விடயங்களைச் சொல்லிவிட்டுச் சமாளிப்தென்பது "சகஜமான" காரியமென்பது அனைவரும் அறிந்த விடயம். சிறீதரன் மீதும், சுமந்தின் மீதும் நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சொல்லி இருக்கிறார் மாவை சேனாதிராஜா. இதனை தொலைக்காட்சியல் பார்த்தபோது அருகில் இருந்த ஒருவர் "அவரிட்டை நடக்கிற காரியத்தைப் பற்றிப் பேசட்டாம் எண்டு சொல்லுங்கோ" என்று சொல்லச் சொன்னார். தமிழ் சுட்டமைப்பினருக்குத் தமது வாக்கு வங்கியின் மீது சந்தேகம் வந்துவிட்டதனால் பல அஸ்திரங்களைப் பிரயோகிக்கத் தொடங்கி இருப்பதாகவும் கருதலாம். இவர்கள் சொல்லிவருவதைத் தொடர்ந்து கேட்டால் அல்லது வாசித்தால் நிச்சயம் நீங்கள் அங்கொடைக்குத்தான் போவீர்கள். இடையிடையே கேட்டால் தெல்லிப்பழைக்குச் சென்று காட்டலாம். ஒரு வாரத்துக்கு முன்னர் கிளிநொச்சியில் சொன்னவற்றிற்கு நேர்மாறாக தென்மாராட்சியில் பேசுவார்கள்.அதே விடயத்தை மாற்றி வடமாராச்சில் பேசுவார்கள்.யாழ்.தெர்தல் மாட்டத்தில் வேட்பாளராக நிற்கும் சிறிதரன் கொழும்பிலுள்ள மனோ கணேசனுக்கு வாக்களிக்குமாறு வேண்டுகிறார். இதன் சூட்சுமம் வேறு ஒன்ற மல்ல. கிளிநொச்சிப் பகுதியில் இருக்கும் மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்தோரை கவருவதற்காக அவர் அடிக்கும் பல்டி தான் இது.

தனக்குப் பின்னால் மோடி எழுந்து நின்று ஆடுகிறார் என்று சொல்லிய சம்பந்தர் இப்போது .லங்கை அரசுக்கச் சர்வதேசம் சமூகம் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற வலியுறுத்துகிறார். முன்பு மோடியை நம்பிய சம்பந்தன் தற்போது அவரில் நம்பிக்கை அற்றவராக ட்ரம்பை் குழுவினரைத் துணைக்கு அழைக்கிறார். அது மட்டுமல்ல பதிய அரசியலமைப்பை உருவாக்காவிட்டால் இலங்கை தோற்றுப் போகும் என்றும் அவர் அரசாங்கத்தை பயமுறுத்தி யிருக்கிறார். ராஜபக்ச அரசு புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். என்று ராஜபக்சவினரே அரசாங்கத்தை அமைக்கப் போகின்றார்கள் என சூட்சுமமாகச் சொல்லுகிறார் சுமந்தரன். அதனை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறோம். எனவே எமக்கு வாக்களியுங்கள் என்று மிகவும் புத்திசாலித்தனமாப் பேசுவதாக எண்ணித் தனது உள்ளக்கிடக்கையைச் சொல்லியிருக்கிறார் அவர். அவரது பேச்சுகள் எல்லாம் சமூக வலைத்தளங்களில் தாராளமாக வலம் வந்து கொண்டு இருக்கிறது. அவர் தொடர்பான பல கேலிச் சோடனைகளும் இடப்பட்டிரக்கின்றன. அவற்றை ஒரு முறை ஆற அமர இருந்து பாருங்கள். ஒரு சட்டம் படித்த புத்திசாலியா இப்படிப் பேசுகிறார் என நினைப்பீர்கள். தமிழ் மக்களை படு முட்டாள்களாக்குவதாக அவர் எண்ணம். பொது மேடைகளுக்குப் போவதற்கு முன்னர் அவர் பின்வரும் திருக்குறளை நன்றாக மனனம் செய்துவிட்டு போகச் சொல்லங்கள்.

யாகாவார் ஆயினும் நாகாக்க
காவாக்கால் - சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (அதிகாரம்:அடக்கமுடைமை. குறள் எண்:127)

பொழிப்பு : காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

பாரதப்போரிலே அர்ச்சுனன் உபயோகித்ததைவிட அதி சக்திவாய்ந்த அஸ்திரங்களை எல்லாம் எல்லா அரசியல்வாதிகளும் உபயோகிக்கத் தொடங்கிவிட்டனர். இவர்கள் எங்கு தவமிருந்து இந்த அஸ்திரங்களைப் பெற்றார்களோ தெரியவில்லை. அத்தனையும் மாரிகாலத்துச் சீன வெடிகளைப் போல வெடிப்பது குறைவாக இருக்கிறது. பல சீறிச் சினந்து விட்டு புகையைக் கக்கிவிட்டு வெடிக்காது போய்விடுகிறது. அவற்றுள் சில வெடிப்பதே இல்லை.இதை அவர்கள் கவனித்தாலும் அதுபற்றிச் சிந்திப்பது கிடையாது.

இதை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்தத் தேர்தலோடு தமிழ் அரசியல் ஒரு புது வடிவம் கொள்ள இருக்கிறது. தேர்தல் முடிவுகள் அதற்கான படிமுறைகளைச் செய்யும் எனப் பலர் நம்புகின்றனர்.பலர் நீக்கப்படலாம் என்பது அவர்கள் எதிர்பார்ப்பு. வாக்கைப்பெறுவதற்காக அவர்கள் வாக்கையும் உபயோகிக்கிறார்கள். செல் வாக்கையும் பயன்படுத்துகிறார்கள். நன்றாகப் பணம் விளையாடுகிறது. இத்தனையும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பினாலா? நாடாளுமன்றக் கதிரைக்கூடாகக் கிடைக்கப்போகும் பதவியும், ஆடம்பர வாழ்கையும் , பிரசித்தமும் பெறுவதற்கு யாருக்குத்தான் ஆசையில்லை. பதவி முடிந்த பின்னரும் வீட்டை விட மனமில்லாமல் அதனை வெட்கம் பாராது கேட்டுப் பெற்றவர் சம்பந்தர். அதேபோல பதவிக்காலம் முடிந்த பின்பும் அரச வாகனத்தை தொடர்ந்தும் உபயோகிக்கப் போகிறேன் என்று பிடிவாதமாய் நின்றவர் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன்.

இவர்கள் இருவரும் தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் வாழ்க்கை வரலாற்றைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். அது மட்டுமல்ல நீங்கள் தனிமனிதரல்லர். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று அவர்கள் வாக்குப் பெற்றுப் பதவிக் கதிரைகளைப் பெற்றவர்கள். நீங்கள் இப்படி யெல்லாம் நக்குண்டு நாவிழப்பதென்பது எமது இனத்துக்கே அவமானமல்லவா! தன்மானத்தைவிட்டு அவர்களிடம் இப்படியெல்லாம் யாசித்துவிட்டு பின்னர் தீர்வு மேசையிலிருந்து அவர்களோடு பேரம் பேசுவதெப்படி? இப்படியான சிறிய ஆசைகளைய டைவதற்கு யாசிப்பதென்பது கேவலமே. அது மாத்திரமல்ல இது போன்ற பொறுப்பற்ற விடயங்களால் உங்கள் பின்னால், உங்கள் தலைமையை நம்பி இருக்கின்ற மக்களையும் கேவலப்படுத்தகிறீர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

## அயலக அரசியல் ஜோக்ஸ்


"தமது கட்சியில் நடக்கும் கோஷ்டி மோதல் இந்த அளவுக்கு வளர்ந்திருப்பது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம்..!"


"அட... நெறையபேர் போட்டியிட்டா என்ன...? வாக்குச் சீட்டை உள்ளே இழுத்துக்கச் சொல்லுங்க சார்...!"


"எதாவது ஒரு ஆட்சி முறையைத்தான் பின்பற்றியாக வேண்டுமா...? ஒரு மாதம் ஜனாதிபதி ஆட்சி முறை... ஒரு மாதம் பிரதமர் ஆட்சி முறை என்று மாறி மாறி இருந்தால் என்ன குடி முழுகிவிடும் என்று கேட்கிறேன்...!"

நன்றி மதன் ஜோக்ஸ், விகடன் பிரசுரம்

# சீனாவின் வஞ்சனையால்

## தாய்வான் தலை நிமிருமா?

## அமெரிக்கா - சீனா இருவரில் இலாபம் யாருக்கு?

எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்



கொரோனா காலத்தில், மனிதநேயத்தற்காக அதிகம் பேசப்பட்ட நாடு கியூபா. ஆதிக்க சக்திகளுக்கு அடிபணியாது, அவர்களின் நயவஞ்சகப் பிடியில் சிக்காமல், உலக நாடுகளுக்கெல்லாம் ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்து, உலகெங்கும் வாழும் மக்களுக்கு தேவையேற்படும் போதெல்லாம் வலிந்து முன்வந்து மருத்துவ உதவிகளை இலவசமாக வழங்கும் நாடுகளின் பட்டியலில், முதலிடம் பிடித்திருப்பது கியூபா. அதனோடு ஆதிக்கச் சக்திகளுக்கு அடிபணியாத, இரண்டாவது சக்தியாக நிற்கும் நாடு தாய்வான் என அறியப்படுகிறது.. உலகில் பல நாடுகள், தாய்வானை ஒரு தனி நாடாகவே கருதவில்லை. அதனைச் சீனாவின் ஒரு பகுதியாகவே நினைக்கிறார்கள். இதற்குப் பின்னால் இருக்கும் உண்மை நிலை என்ன? உலக சுகாதார நிறுவனம் தாய்வானைப் புறம் தள்ளுகிறதா? ஐக்கிய நாடுகள் சபை தாய்வானை ஏன் தூரத்தில் வைக்கிறது? எனப் பல உண்மைகளை இக்கட்டுரையில் வாயிலாக அலசப்போகிறோம். 1980களில் தாய்வானில் 40 சதவீத மக்களுக்குக் கூட மருத்துவக் காப்பீடு இல்லை. ஆனால் இன்றோ, மருத்துவக் காப்பீடு இல்லாத ஒரு நபரைக்கூட அங்கு காணமுடியாது. அத்தனை கச்சிதமாகத் தாய்வான் அரசு காப்பீட்டு நிறுவனத்தை (Single Payer) வழிநடத்திச் செல்கிறது. அதற்காக ஓர் அபரிமிதமான சட்டத்தையும் தாய்வான் உருவாக்கியுள்ளது. அதாவது ஏழை, பணக்காரன் என்ற பாரபட்சமின்றி அனைவருக்கும் ஒரே தரத்திலான மருத்துவ வசதியைக் கொடுக்கவேண்டும் என்பதே அவர்களின் முக்கிய நோக்கம். இப்படிப்பட்ட தாய்வானைச் சீனா, மிக நீண்ட காலமாக, குறிப்பாகச் சொல்லப் போனால் 1971 முதலே வெளியே தலை எடுக்கவிடாமல் அதன் தலையில் கைவைத்து அமுக்குவது போன்று அடக்கிவருகிறது. ஒருவேளை அப்படி வருவதானால்

அது சீனாவின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமே தவிர, தனியாகத் தாய்வானாக உதயமாகிவிடக் கூடாதென்பதில் கண்ணும் கருத்துமாகச் சீனா இருந்து வருகிறது. உதாரணமாக, ஒலிம்பிக்கில் கலந்து கொள்வதானால் தாய்வானாகக் கலந்து கொள்ள முடியாத நிலையில், அதற்கான பல சட்டப் போராட்டங்களை நடத்திய பின் “சீன தைப்பே” (Chinese Taipei) என்று வைத்துக் கொண்டுதான் கலந்து கொள்ளலாம் என்ற நிர்ப்பந்தங்களையும், கட்டுப்பாடுகளையும் ஏற்றுக் கொண்டே ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள அனுமதித்தனர். தாய்வானுக்கு முன்பாக எப்போதுமே சீனா எனும் அடைமொழி இருக்கவேண்டும் என்பதே சீனாவின் விருப்பமாகும். அதற்குக் காரணம், தாய்வான் என்பது மிகவும் உறுதியான கட்டுக்கோப்பான மக்களைக் கொண்ட, தொழில்நுட்பத்தில் முன்னணியில் இருக்கும் ஓர் நாடு. ஆப்பிள் நிறுவனத்திற்கு முக்கியமான உதிரிப்பாகங்களை தாய்வானே தயாரித்துக் கொடுக்கிறது. குவாவி (Huawei) எனும் சீன நிறுவனத்தை எல்லோருக்கும் தெரியும். 5ஜி தொழில்நுட்பத்தில் முன்னணியில் நிற்குமோர் நிறுவனமாகும். இது ஒரு காலகட்டத்தில் தாய்வானின் எச்.ரி.சி

(HTC) எனும் நிறுவனத்தின் சில தொழில் நுட்பங்களைத் திருடியது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? இதே சீனாவில் கொரோனா வைரஸ் பெரிய அளவில் பரவத் தொடங்கிய தருணம், தாய்வான் வெகுவாகப் பாதிக்கப்படப்போகிறது. பொருளாதாரத்தில் மிகப்பெரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் எனப் பலரும் ஆரூடம் சொன்னார்கள். இவ் இதழில் வெளிவந்த கேட்ஸ் அறக்கட்டளையின் “கொரோனா ஒத்திகை” நாடகம் எனும் கட்டுரையில், தாய்வான் இரண்டாவதாக இருப்பதாகக்கூட நாம் பார்த்தோம். ஆனால் அத்தனைபேரின் எண்ணத்தையும் தவிடுபொடியாக்கியது தாய்வான். அவுஸ்திரேலியாவுக்கும், தாய்வானுக்கும் ஒரே காலகட்டத்தில் தான் கொரோனா பரவ ஆரம்பித்தது. இன்றைய நிலவரப்படி உலக அளவில் அவுஸ்திரேலியா 72வது இடத்தில் இருக்கிறது. அங்கு 14,403 தொற்றாளர்களில் 9019பேர் பூரணமாகக் குணமடைந்தனர் எனவும், இறப்பு 155 எனவும் இணையத் தரவுகள் தெரிவிக்கின்றன. ஆனால். தாய்வான் 160வது இடத்தில் வெறும் 458 தொற்றாளர்களில் 440 பேர் பூரண குணமடைந்துள்ளனர் எனவும், 07பேர் மட்டுமே இறந்துள்ளனர் எனவும் தரவுகள் காணப்படுகின்றன. வல்லரசான அமெரிக்காவே இந்தக் கொரோனா விடயத்தில் திண்டாடுகின்ற

நிலையில், தாய்வான் இவ்வளவு பெரிய அளவில் கட்டுப் படுத்தியிருக்கிறதே..! அதிசயம்தான். அதற்காக அவர்கள் உலக சுகாதார நிறுவனத்திடம் ஏதாவது உதவிகளைப் பெற்றுக் கொண்டார்களா? அவர்களுடன் மிக நெருங்கிய உறவைப் பேணுகிறதா? என்றால் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும். இவ்வளவு உறுதியான சுகாதாரக் கட்டமைப்பைக் கொண்ட தாய்வானை உலக சுகாதார நிறுவனம் ஓர் பூச்சி புழுவைப் பார்ப்பது போன்று கூடத் பார்ப்பதில்லை என்பது தான் உண்மை நிலவரம். ஆரம்பத்தில் உலக சுகாதார நிறுவனம் சீனாவிடம் இருந்து சில மருத்துவ அறிக்கைகளை வாங்கி, அதை அப்படியே உலக அரங்கில் ஒப்புவித்தார்கள். அந்த அறிக்கையில் கொரோனா மனிதனிடம் இருந்து மனிதனுக்குப் பரவாது எனச் சொல்லப்பட்டிருந்தது. பின்பு அவர்கள் அறிக்கையில் கொரோனா மனிதனிடமிருந்து மனிதனுக்குப் பரவக்கூடியது என்றார்கள். முதலில் முகக் கவசம் தேவையில்லை.. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் அணிந்தால் போதும் என்று சொன்னார்கள்... அதே உலக சுகாதார நிறுவனம் தான் இப்போது அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும் என்றும் சொல்கிறது. இந்த நேரத்தில் நாம் தாய்வானின் நடவடிக்கைகளை உற்று நோக்குவது பொருத்தமான தென எண்ணுகிறேன். மனிதனிடமிருந்து மனிதனுக்குப் பரவாது என்று உலக சுகாதார நிறுவனம் சொல்லிய போது, தாய்வான் உலக சுகாதார நிறுவனத்திற்கு ஓர் மின்னஞ்சலை அனுப்பியது. அத்துடன் சில செய்திகளையும் இணைத்தது. நீங்கள் நினைப்பது தவறு, 2003ஆம் ஆண்டில் சார்ஸ் வைரஸ் சீனாவிலிருந்து வந்து உலகமெங்கும்









பரவும்போது.. நாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டோம்., ஆதலால் கொரோனா மனிதனிடமிருந்து மனிதனுக்குப் பரவும் என்பதால் உலக நாடுகளுக்கு உடனடியாக அதனைத் தெரியப்படுத்துங்கள் என அம்மின்னஞ்சலில் தாய்வான் தெரிவித்திருந்தது. இந்த மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றதாகத் தாய்வானுக்குப் பதில் அனுப்பிய உலக சுகாதார நிறுவனம் அதனடிப்படையில் நடவடிக்கை எடுத்தார்களா என்பது தெரியவில்லை. அந்த மின்னஞ்சல் குறிப்பைக் கவனத்தில் எடுத்திருந்தால், உலகநாடுகள் இத்தகைய பாரிய இழப்பைச் சந்தித்திருக்காது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தாய்வான் அரசு முகக்கவசங்களைப் போடுமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டது. முகக்கவசங்களைத் தயாரித்து அனைத்து மக்களுக்கும் இலவசமாக வழங்கியது.அத்துடன் மற்றைய நாடுகளுக்கும் முகக்கவசங்களை வழங்க முன்வந்தது. ஒருகோடி முகக்கவசங்களைத் தயாரித்து அதில் 70 லட்சம் முகக்கவசங்களை ஐரோப்பிய நாடுகளுக்கும், 30 லட்சம் முகக்கவசங்களை அமெரிக்காவிற்கும் இலவசமாக ஏற்றுமதி செய்தது. ஆனால், இத்தாலிக்கு சீனா இலவசமாக முகக்கவசத்தைத் தயாரித்துக் கொடுத்ததாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இத்தாலி அதனை மறுத்து, இலவசமாக அல்ல, கடனாகவே சீனாவிடமிருந்து முகக் கவசங்களைப் தான் பெற்றுக்கொண்டதாகக் கூறியது. கடனுக்குக் கொடுத்த சீனாவையே பாராட்டிப்பேசிய நாம், இலவசமாகக் கொடுத்த தாய்வானைப் பற்றி எதுவும் பேசாதது ஏன்? அதற்குப் பின்னாலதான் சீனா எனும் அசுர சக்தியின் அரசியல் இருக்கிறது.

ஓர் உலக ஒழுங்கு (One World Order) என்றால் என்ன? ஒற்றை ஆட்சி எனத் தான் நாம் நினைக்கிறோம். ஆனால் சீனாவோ ஓர் சீனா (One China) என்ற கனவைக் காண்கிறது. அதாவது, சீனா, தாய்வான், கொங்கொங் இணைந்த ஒரே சீன இராச்சியத்தை உருவாக்கி அதன் கீழ் இந்த உலகம் வரவேண்டும் என்பதே சீனாவின் விருப்பம். இதுவும் ஒரு உலகக் ஒழுங்குக்குட்பட்டதுதான். கொரோனாவில் இருந்து தாய்வான் எப்படித் தப்பித்தது? அமெரிக்கா உள்ளிட்ட மற்றைய நாடுகள் சீனாவிற்கு யாரும் போகவேண்டாம் என்றும் அங்கிருந்து யாரும் வரவேண்டாம் என்றும் தடைவிதித்தது. ஆனால் தாய்வானோ "ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டால், சுற்றியிருப்பவர்களை அவதானித்துக்கொள், உள்வரும் வெளிநாட்டவர்களுக்கு வெகுவான கட்டுப்பாடுகளை விதி, உன்னுடைய நாட்டிற்கு என்ன நடக்கிறது என்பதைப்பார்" என்று அசாதாரணமாக இந்த வைரஸை எதிர்த்து நின்றார்கள். அத்துடன் பல உதவிக் குறிப்புகள் (ரநயடவா வுனிள) அடங்கிய அறிக்கையையும் உலக சுகாதரர நிறுவனத்திடம் சமர்ப்பித்தார்கள். ஆனால் உலக சுகாதார நிறுவனம் அதனைக் கண்டுகொள்ளவேயில்லை.

அதற்குக் காரணம், உலக சுகாதார நிறுவனம் தாய்வானை ஒரு நாடகவே ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான். 2016 வரை உலக சுகாதார நிறுவனத்தில் தாய்வான் பார்வையாளராகப் (Observer) பங்கேற்று இருந்தது. 2016 இன் பின் அதுவும் பறிக்கப்பட்டுவிட்டது. நீண்ட நாட்களாகவே உலக சுகாதார நிறுவனத்தில் தமக்கொரு இடத்தைத் தருமாறு தாய்வான் கேட்கிறது. நாமும் ஐ.நா சபையில் அங்கம் வகித்தவர்கள் தான். 1971இல் சீனாவுக்காக தாய்வான் ஐ.நா சபையில் இருந்து தூக்கிவீசப்பட்டது. ஐ.நா சபையில் இன்று தாய்வானின் இடத்தில் தான் சீனா இருக்கிறது என்பது நம்மில் எத்தனைபேருக்குத் தெரியும்.?



தாய்வானின் அத்தனை அதிகாரங்களையும் பறித்துகொண்டு சீனா, இப்போது அதனைத் தன்னுடைய அடிமையாக இருக்கச் சொல்கிறது. 2010 - 2016 ஆம் ஆண்டுவரை தாய்வான் உலக சுகாதார நிறுவனத்தில் பார்வையாளராகப் பங்கேற்று இருந்தது. 2010 இல் உலக சுகாதார நிறுவனத்தில் ஒரு பார்வையாளர் நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டதாகப் பெரியளவில் பேசப்பட்டாலும், சீனாவின் ஒரு மாகாணமாகவே தாய்வான் சேர்த்துக் கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதாக, தாய்வான் அரசியல்வாதிகள் கையெழுத்திட்ட இரகசிய ஆவணம் ஒன்று கிடைக்கப்பெற்றது. அந்தளவுக்கு தாய்வானின் மீது சீனா செல்வாக்குச் செலுத்தியிருந்ததை அறியமுடிகிறது. ஆனால் இன்று, கொரோனா தாக்கத்திலிருந்து பெரியளவில் மீண்ட நாடாக தாய்வான் இருக்கிறது. இதைச் சீனாவோ, உலக சுகாதார நிறுவனமோ கண்டுகொண்டதாக இல்லை.




கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும், ஜப்பானிய அதிபரும் உலக சுகாதார நிறுவனத்தில் தாய்வான் நிரந்தர உறுப்பினராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். அமெரிக்காவும் அண்மையில் இதையே தனது விருப்பமாகவும் தெரிவித்திருக்கிறது. அமெரிக்கா அப்படிச் சொல்வதற்குக் காரணம் உண்டு. இதனை ஒரு கணிதத் தேற்றமாகவும் நிறுவலாம். சீனா - கியூபாவைப் போற்றி வருகிறது. அதே சமயம் அமெரிக்காவிற்கும் கியூபாவைப் பிடிக்காது. அமெரிக்கா தாய்வானுக்கு ஆதரவு வழங்கிவருவது சீனாவிற்குப் பிடிப்பதில்லை. அதனால் சீனா தாய்வானோடு ஒரு முறுகல் நிலையிலுள்ளது. எனவே அமெரிக்காவுக்குத் தாய்வானைப் பிடிக்கும் என்பதே கணக்கு! கொரோனா வைரஸ் இந்தளவுக்கு வருவதற்குக் காரணமாகவிருந்த உலக சுகாதார நிறுவனத்தை எதிர்த்து கேள்வி கேட்ட கியூபா, தாய்வான் போன்ற நாடுகளை நாம் போற்ற வேண்டும். தாய்வான் பற்றிய இந்த விடயம் இப்போது ஏன் பேசப்படுகிறது எனும் கேள்வியும் எழலாம்? உலக சுகாதார நிறுவனத்தின் உதவி இயக்குனர் புரூஸ் அவர்களை கொங்கொங்கைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் இணைய வழியாக நேர்கண்டார். அந்த நேர்காணலில் "இதற்குப் பிறகாவது உலக சுகாதார நிறுவனத்தில் தாய்வானைச் சேர்த்துக் கொள்வீர்களா? " என ஊடகவியலாளர் கேட்டதற்கு புரூஸ் அவர்கள் மழுப்பியவிதம்.. அண்மைய நாட்களில் பேசுபொருளாகியுள்ளது. உலகளவில் தாய்வானைப் பற்றிப் பேசக்கூடாதென உலக சுகாதார நிறுவனமும் ஐ.நாவும் நினைக்கின்றன. சீனாவும் அதையே நினைக்கிறது. எனவே சீனா - அமெரிக்கா போன்ற வல்லாதிக்கச் சக்திகளை விடுத்து, அவர்களை எதிர்க்கும் கியூபா, தாய்வான் போன்ற நாடுகளின் சாதனைகளைக் கொண்டாடுவோம். நிச்சயமாக ஏனைய நாடுகளுக்கும் அது மிகப்பெரிய உந்துதலாக அமையும்..!



# காற்று வாக்கிலே....

தமிழர்கள் விரும்பும் தீர்வை அரசு ஒருபோதும் வழங்கவே மாட்டாது. இது ராஜபக்ஷ அரசின் பேச்சாளரும் முன்னாள் ராஜாங்க அமைச்சருமான ஹெஹலிய ரம்புக்வெல்லவின் அறிவிப்பு. நன்றி. இதனை விடவும் நல்லதொரு வார்த்தையை உங்களிடம் தமிழர்கள் எதிர்பார்க்கவே மாட்டார்கள் இதைத்தான் நீங்களும் உங்கள் ஆட்களும் பல்லாண்டு காலமாக கூறிவருகின்றீர்கள். ஐயா கிறுக்கல் பட்ட அந்தக் காலத்து "கிராமபோன்" இசைத்தட்டைப் போன்று ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப உளறிக் கொண்டிருக்காதீர்கள்!

உங்கள் அரசு மட்டுமல்ல எந்த அரசு வந்தாலும் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை தரமாட்டார்கள் என்பதும் உண்மை. அந்த அளவுக்கு மற்றைய இனத்தவரின் மனித உரிமைகளையோ அரசியல் உரிமைகளையோ மதிக்கும் பண்பு உங்களிடம் அதாவது ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து இருப்போர்களிடம் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையே ஆகும். இருந்திருக்குமேயானால் இந்த நாடும் மக்களும் இவ்வளவு அவலங்களையும் அவமானங்களையும் சந்திக்க வேண்டி வந்திருக்காதே! பரவாயில்லை. தமிழர்களுக்கு நீங்கள் தரவிரும்பும் அல்லது உங்களால் தரக்கூடிய தீர்வு தான் என்ன? இதையாவது வெளிப்படையாகச் சொல்லாமே...! சொல்லமாட்டீர்கள், சொல்லும் திராணியோ, நேர்மையோ உங்களுக்கு கிடையாது என்பதே உண்மை.

நிலைமை இவ்வாறிருக்க சமஷ்டி தரமாட்டோம், அதிகாரப் பரவலாக்கல் நீங்கள் விரும்பியபடி தரமுடியாது. சமஷ்டி கேட்டால் இரத்த ஆறு ஓடும், சிறைவாசம் தான் கிடைக்கும் என்றெல்லாம் வெறும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல காவியுடைப் பிக்குகளும் கூறுவதுதான் வெட்கக் கேடான விடயம்.



இலங்கை மூவின மக்கள் வாழும் நாடாம் எல்லோருக்கும் சம உரிமை வழங்கப்படுமாம், அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்றை எட்ட அரசு தயாராம், ஆனால் சிங்கள மக்கள் அதற்கான ஆணையைத் தர வேண்டுமாம்...! எப்படி இருக்கிறது மஹிந்த அணியினரின் பேச்சு...?

இதனை விடவும் "இரத்த ஆறு மீண்டும் ஓடும்" என்ற காவியுடைதாரிகளின் மிரட்டல் பேச்சு வேறு...! சிறுபான்மை மக்கள் காதிலை பூ வைச்சுக் கொண்டு தான் எப்பவும் இருப்பினம் என்று நினைக்கிறார்கள் போலும்...!

மீண்டும் சுமந்திரன் தன் உள்ளக்கிடக்கையை சூட்சுமமாக தெரிவித்துள்ளார். அதாவது ராஜபக்ஷ அரசு புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்கும் நிலைப்பாட்டில் இருக்கிறதாம். அதனை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள தாங்கள் நினைக்கினமாம்...! எப்படி இருக்கிறது? அது என்ன சாதகமாக பயன்படுத்துவது... அதுதான் குழப்பமாக இருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ராஜபக்ஷ அணியினரிடமிருந்து வரும் சமிக்ஞைகள் அனைத்துமே அச்சமூட்டும் பாணியிலேயே அமைந்துள்ள நிலையில்... சுமந்திரன் ஐயா அவற்றை எவ்வாறு சாதகமானதாக பயன்படுத்தப் போகிறார்?

13 ஆவது திருத்தச் சட்டம் இல்லை... சமஷ்டி தீர்வு தரவே மாட்டார்கள் அதிகாரப் பகிர்வுக்கு பெரும்பான்மை இனம் சம்மதிக்காது.... இனத்துவ தனித்துவத்தைப் பேணிப்பாதுகாக்க தேரர்கள் அனுமதிக்கமாட்டார்கள். ஒன்றுமே இல்லாத வெற்றுப் பானையான மாகாணசபையை முற்றாக நீக்க வேண்டும் என்ற பேரினவாதக் குரல் உருவாக்கம் என்பது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமானதும் நீதியானதுமான ஒரு தீர்வை முன்வைக்குமா? என்பதே சந்தேகம் தான். அதேசமயம் ஐயா சொல்கிறார். உலகில் இன்று ஒற்றையாட்சி, சமஷ்டி ஆட்சி என்ற சொற்பதங்கள் மாற்றம் பெற்று விட்டனவாம் முன்பு கூறப்பட்ட இவற்றிற்கான வரைவிலக்கணங்களும், கருத்துக்களும், சொல்லிலக்கணமும் இப்போது இல்லையாம்.... ! எப்படி இருக்கிறது ஐயாவின் புதிய விளக்கம்.



அப்படியானால் ஒற்றையாட்சி, சமஷ்டி ஆட்சி என்பதற்கு ஐயா புது விளக்கவுரையை தரப்போகிறாரோ? "ஏக்கிய ராஜ்ய" என்ற சொல்லுக்கு கொடுத்த விளக்கத்தால் ஏற்பட்ட தலைச் சுற்றல் இன்னும் நிற்கவில்லையே...! எல்லாம் "சூ... மந்திரகாளி" வேலையா அல்லவா இருக்குது.

சுமந்திரன் ஐயா சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்தை சொல்லாமே புதிய அரசியலமைப்பு உருவாக்க அரசுக்கு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலம் தேவை அதற்காக அரசுக்கு முண்டு கொடுக்கப் போறம் அல்லது செடில் பிடிக்கப் போறம் எண்டு...

அதை விட்டிட்டு இந்த சுத்துமாத்து சுமந்திர பாஷை எல்லாம் ஏனாம்...?

ஆசை யாரைத்தான் விட்டது. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பதவியாசை, அதிகார ஆசை, இப்படி ஆசைகளுக்கோர் அளவில்லை. அரச சுக போக வாழ்க்கையே முற்றாகத் துறந்து, ஞானம் பெற்று உலகிற்கே அன்பு மார்க்கத்தை போதித்த புத்த பகவான் காட்டிய வழியில் பௌத்த தர்மத்தை கடைபிடிக்கும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு. பௌத்தர்கள் சிங்களவர்கள் பெருமளவுக்கு இருப்பதால் பௌத்த சிங்கள குடியரசு என்று இந்த நாட்டினை ஆட்சியிலுள்ளோர் வெளிப்படையாகவே பிரகடனமும் செய்துள்ளனர்.

அரச வாழ்வை துறந்தவரின் பெயரை மீண்டும் அரசியலுக்குள் இழுத்து வந்து அவர் போதித்த அறவழிக்கு அப்பால் சென்று அவரது பெயரால் அதிகாரம் செய்யும் போக்கு அதிதீவிர முனைப்புக்கொண்டிருப்பதை நாட்டில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகள் மூலம் உறுதிசெய்யக் கூடியதாக உள்ளது.

அதுவும் மிக அண்மைக் காலமாக சிங்கள பேரினவாதிகள் தமது மேலாதிக்க, அதிகார செயற்பாடுகளுக்கு பௌத்த மதத்தை துறவிகளான தேரர்களே அதிகார ஆட்சி பீடத்தவரையே ஆட்டிப் படைக்கும் மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு ஆட்சிப் பீடத்தினை அதீத அதிகார பலத்துடன் தம்வசம் வைத்திருப்பவர்களும் வலுவான காரணிகளாவர்.

மதவாதத்தையும் இனவாதத்தையும் உசுப்பேத்தி விட்டே அரசியலை, ஆட்சியை தக்க வைக்கும் பரிதாப நிலையில் அரசு உள்ளதே இதற்குக் காரணம். வரலாற்று உண்மைகளையே திரிபு படுத்தி மாற்றி எழுதும் வல்லமை கொண்டவர்களாக தேரர்கள் புதிய பரிணாமம் எடுத்திருப்பது உலக நாடுகளால் உன்னிப்பாக கவனிக்கப்படும் விடயமாகியுள்ளது.

அறம்,அன்பு, கருணை, இரக்கம் பற்றி பேச வேண்டிய ஞானவான்கள், வன்முறை, இரத்தம், இனமத ஏற்றத் தாழ்வு, என அரசியல் அதிகார வசனம் பேச ஆரம்பித்துள்ளமை நாட்டிற்கு நல்ல சகுனமல்ல...



உதாரணமாக அண்மையில் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதேசத்தில் புதையல் தோண்டிய எண்மர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- அவர்களில் ஒருவர் - பிக்கு!

- இச் செய்தி சொல்லும் "செய்தி" ஆரோக்கிய மானதல்ல.

அந்தக்கால விடுதலைப் போராட்ட வீரரும் இந்தக் கால தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா அவர்கள் ஆழமாக ஆலோசித்த பின்னர் துணிச்சலாக ஒரு முடிவை எடுத்துள்ளார் போல் தெரிகிறது.

முடிவை எடுத்தாலும் - அது தொடர்பாக நடவடிக்கையை எடுப்பாரா என்பது தெரியாது. அது அவருக்கு அப்பாற்பட்ட விடயம் என்கிறார் அவரது கட்சி பிரமுகர் ஒருவர். நடவடிக்கை எடுக்கப்படுமா? இல்லையா? என்பது வேறு ஆனால் ஒரு செய்தியை வெளிப்படையாக சொன்னமைக்கு அவரைப் பாராட்டலாம்!

அதாவது கட்சிக்குள் இருந்து கொண்டு சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்து விமர்சனத்துக்குள்ளாகி நிற்பவர்களும் கட்சியின் பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளவர்களுமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும், சி. சிறிதரன் ஆகியோர் மீது தேர்தல் முடிந்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவை ஐயா ஓர் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நல்லது. இதனை அவர் ஒரு கட்சித் தலைவருக்கே உரிய பொறுப்புணர்வுடன் கூறினாரா அல்லது புற அழுத்தங்கள் காரணமாக கூறினாரா என்பது அவருக்கே வெளிச்சம். அது சரி... நடவடிக்கையை தேர்தலுக்குப் பின்னர் என ஒத்தி வைத்தது ஏன்? சூட்டோடு சூடாக உடனேயே நடவடிக்கையை எடுத்திருந்தால் உங்கள் நேர்மையை பாராட்டலாம். கட்சிக்கும் பெயர் கிடைத்திருக்கும். காலதாமதம் குற்றவாளிகளை தண்டனையில் இருந்து பாதுகாக்க, அல்லது அவர்களின் குற்றங்களை மறந்து போகச் செய்யவே உதவும்.



இங்கேதான் ஒரு கட்சித் தலைவருக்குரிய ஆளுமைக் குறைபாடு அம்பலத்துக்கு வருகிறது. சில வாரங்களின் முன்னர் கட்சியின் மகளிர் அணி உறுப்பினர்கள் சுயாதீனமாக பத்திரிகையாளர் மாநாடு நடத்தி கட்சிக்குள் நடந்ததாக கூறப்படும் நிதி மோசடி குறித்து செய்தி வெளியிட்டமையும் இதேதன்மை கொண்டதுதான்.

ஆனால் அவர்கள் மீது எவ்வித விசாரணையையும் மேற் கொள்ளாது அவர்களை கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்த வேகம் இவர்கள் விடயத்தில் இருக்கவேயில்லையே! அவர்கள் பாவம் பெண்கள்... இவர்கள் பலமான ஆண்கள்...! அப்படித்தானே... ! தலைமை தடுமாறலாமா?

# அரசியல் கைதிகள் விடுதலை! அமைதியாக வாழ்வதற்கு வீடு!! வாழ்வாதாரத்தைப் பேண புதிய வழிவகைகள்!!! காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளுக்கு நீதி!!!



**உண்மையைச் சொல்வோம்..! சொல்வதைச் செய்வோம்...!!**

எனப் பல நடைமுறையில் சாத்தியப்படக் கூடிய விடயங்களை மட்டும் தமது அரசியல் பரப்பில் பேசிவருபவர் சட்டத்தரணி றெமீடியஸ். இவர் அரசியலில் களமிறங்கியிருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் அவ்வழியேதான் தமது அரசியல் முன்னெடுப்புகளைச் செய்து கொண்டிருக்கிறது.மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயத்தை அன்றிலிருந்து இன்றுவரை தனது அடிப்படைக் கோட்பாட்டைத் தாங்கிப் பயணிக்கும் கௌரவ தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் நடவடிக்கைகளின் முன்னெடுப்புகளின் மூலமே தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் என்று இவர் அதீத நம்பிக்கை கொண்டிருக்கிறார். அதற்கு உதாரணமாகத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாம் எனச் சொல்லி வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் இவர்களது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் வகையில், மத்தியில் ஆட்சிக்கு வரும் அரசோடு இணைவது பற்றிப் பேசத் தொடங்கியிருப்பதைச் சொல்லலாம் என்று சொல்லும் சட்டத்தரணி றெமீடியஸ் அவர்கள், 2020 நாடாளுமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - யாழ். மாட்டத்தில் வேட்பாளராகக் களமிறங்கியிருக்கிறார். அவர் தொடர்ந்தும் மக்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறார்.

**அரசியல் கைதிகள் தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? நீங்கள் அரசோடு இணைந்திருப்பதால் உங்களால்தான் அவர்கள் விடுதலை சாத்தியம் என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

தற்போதைய பிரதம மந்திரி அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நாம் ஏறத்தாழ 12500 அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தோம். எமது தலைமையின் விடா முயற்சியினாலேயே அது சாத்தியப்பட்டது. அதன் பின்னர் வந்த நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்பட்ட மைத்திரி - ரணில் அரசில் இணைந்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் அவ்வாறான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. இது போன்ற பொறுப்பற்ற செயற்பாடுகள் எல்லாம் அவர்களுக்குத் தமிழ் மக்கள் மீது எந்தவித அக்கறையும் இல்லை என்பதைக் கோடிட்டுக்கு காட்டுகிறதல்லவா! எனவே நாம் இம்முறை தெரிவுசெய்யப்பட்டு நாடாளுமன்றம் சென்றால் முதல் பிரச்சினையாக அரசியல் கைதிகள் பிரச்சினையைக் கையிலெடுத்து அவர்களை விடுதலை செய்வோம் என்று உறுதிபடச் சொல்லுகிறோம். இது வெறுமனே வாக்கைப் பெறுவதற்காகச் சொல்லப்படும் பொய்யான வாக்கல்ல. அதனை நடைமுறையில் சாத்தியமாக்குவோம். அதற்கு அரசு அமையும் காலந்தொட்டு ஆறு மாத கால அவகாசத்தை நீங்கள் எமக்குத் தரவேண்டும்.உங்கள் எண்ணங்களை அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது.

**யுத்தம் முடிந்து பல வருடங்களானபோதும் பலர் இன்னும் முகாம்களிலும், நிரந்தரமற்ற இடங்களிலுமே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான நிரந்தர வாழ்விடம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எப்படி அணுகப்போகிறீர்கள், அதற்கு உங்களிடம் நடைமுறைத் திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா?**

ஆம். வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற அனைவரையும் சுய மரியாதையுடன் வாழ்வதற்குரிய சூழலை உருவாக்குவோம். பேதமின்றி அனைவரும் வீட்டு உரிமையாளர்கள் என்ற நிலைக்கு உயர்ந்து செல்வர். எமது திட்டத்தின்படி அவர்கள் காணி, வீடு மற்றும் அது தொடர்பான அத்தனை பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய திட்டங்கள் எம்மிடம் உண்டு . முகாம் வாழ்க்கை முறையிலிருந்து அவர்கள் விடுபடக் கூடியவாறு, அரசுடன் இணைந்த கட்சி என்றவகையில் எம்மால் எந்தவித தங்கு தடைகளுமின்றிச் சாத்தியப்படுத்தலாம்.

**மக்களுக்கு வீட்டு பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த பின்னர், அவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்று எண்ணுகிறீர்கள்? தீர்க்கப் போகிறீர்கள்?**

எமது நிலப்பரப்பிலே முதலீடு செய்வதற்குப் பல முதலீட்டாளர்கள் முன்வந்திருக்கின்றனர். முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கலாம். அந்த வகையில் யுத்தத்தால் மூடப்பட்ட பல தொழிற்சாலைகள் இன்னும் இயங்காதிருக்கின்றன. அவற்றை மக்கள் வாழ்வியலை எந்த விதத்திலும், பாதிக்காத வகையில் இயங்க வைக்க எமது கட்சி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இளைஞர்கள், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கலாம் என்பதே எமது திட்டங்களில் ஒன்று.

**ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்வு கிடைக்காது போராடிவருகின்ற காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?**

கடந்த மைத்திரி - ரணில் அரசு இருந்த காலத்திலேயே தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் போராட்டம் வலுப்பெற்றதும் அந்தக் காலகட்டத்திலேயே என்றதைப் பலரும் அறிவர். ரணில் - மைத்திரி அரசு அதனை கண்டு கொள்ளவும் இல்லை அதற்குரிய தீர்வைக் கொடுக்க முற்சிக்கவும் இல்லை. அவர்களோடு துணையாக நின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் அதற்கான எந்தவித முயற்சிகளையும் எடுத்திருக்க வில்லை. இது வெளிப்படையானதொரு விடயம். அது போல கண்களை மூடிக்கொண்டு நாம் இருக்க மாட்டோம். அதனை முதன்மைப்படுத்தி அரசுடன் பேசக் கூடிய வாய்ப்பிருக்கிறது.


என்ன சொன்னாலும் எமக்குச் சார்பான அரசே மத்தியில் வருவது உறுதியாகிவிட்டதை மக்கள் எழுச்சி வெளிப்படுத்தி வருகிறது. எனவே அவர்களுடன் பேசிப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். தீர்வை முன்வைக்கக் கூடிய இடம் நாடாளுமன்றமே! எனவே எமக்கு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தைத் தாருங்கள் என்றுதான் கேட்கிறோம். தற்போது காணப்படும் அத்தனை பிரச்சினைகளுக்கும் எம்மிடம் தீர்வுத் திட்டங்கள் உண்டு. அதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் வாக்கை எமக்கு அளித்து எம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது மட்டுமே!



எனவே உங்கள் வாக்கு வீணைக்கே!
உங்கள் வாக்கை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
வேட்பாளராகிய எனக்கு அளிப்பதன் மூலம்
உங்கள் கனவுகள் எல்லாவற்றையும்
நனவாக்கிக் கொள்ளுங்கள்.





**மு.றெமீடியஸ்**
**பிரபல சட்டத்தரணி**

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## Guruparan Kumaravadivel

- நான் எனது “ நடுநிலையை “ கைவிட்டு விட்டேன் என புலம்பும் தரப்புக்களுக்கு 2015 இல் நான் எழுதிய இந்த பதிவை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்றும் இன்றும் ஒரே நிலைப்பாடு தான்.

- “தனிப்பட்ட ரீதியாக ஒரு வாக்காளராக எங்கள் எல்லோருக்கும் ஓர் அரசியல் மட்டுமல்ல – குறிப்பிட்ட கட்சி தெரிவும் இருக்கும். என்னை பொறுத்த வரையில் எந்தக் கட்சியை தெரிவு செய்கின்றேன் என்பது ஒரு கட்சியின் மீதான பாசத்தால் வரும் தெரிவல்ல. இன்றைய அரசியல் சூழலில் யார் சரியாக இயங்குகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்ட தெரிவு அது. அப்படி ஒரு கட்சி தெரிவு ஒன்று இல்லை என்று நாம் நடிக்க முடியாது. அப்படி இல்லாவிடில் ஒன்றை வாக்கை செல்லுபடி அற்றதாக்க வேண்டி வரும் அல்லது வாக்களிக்காதிருக்க வேண்டி வரும். எனது தெரிவு தொடர்பில் பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்கும் விவாதிப்பதற்கும் எனக்கு உரிமை உண்டு. நான் எனது முகப்புத்தகத்தில் தன்னிலை சார்ந்தே பதிவிடுகிறேன். எனது கருத்துக்கள் எனது கருத்துக்களே நான் சார்ந்த அமைப்பினது அல்ல. நான் சார்ந்த அமைப்பு என்னிலும் பெரிது

- ஊடக நடுநிலை (**Neutrality**) பற்றிய விவாதம் தேர்தல் காலத்தில் மீண்டும் விவாதப் பொருள் ஆகியிருக்கிறது. எந்த செய்தியை தலைப்புச் செய்தியாக்குகிறோம், எப்படி அந்த செய்தியை பதிவிடுகிறோம், எதை செய்தியாக்குகிறோம் என்பதில் எல்லாம் நிச்சயம் அரசியல் இருக்கிறது. எனக்கு இந்த நடுநிலைமை என்பதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. கருத்துள்ள எவருக்கும் நடுவு நிலை சாத்தியமில்லை. ஊடக நடுவுநிலைமை என்பது ஒரு கற்பிதம் என்று ஊடகத்துறை சார்ந்த புலமையாளர்களும் நேர்மையான ஊடகவியலாளர்களும் ஒப்புக் கொள்வர். **Objective** ஆக எழுதுவது ஒரு கலை. அது வாசகர்களை தமது நடுவுநிலை தொடர்பில் நம்பவைத்து தமது கருத்தை ஏற்றுக் கொள்ள செய்யும் ஓர் முயற்சி. ஆகவே நாங்கள் நடுவுநிலைமை கடைபிடிப்பவர்கள் என்று சொல்பவர்கள் தங்களது சார்பை (**bias**) அறியாதவர்கள் அல்லது மறைப்பவர்கள் என்று தான் நான் கருதுவேன். அது ஆபத்தானது, ஏமாற்றும் தன்மையானது.

- நடுவுநிலைமை என்பது மாயை என்றால் அது எனக்கும் நிச்சயம் பொருந்தும். அவ்வாறெனின் நான் ஓர் அமைப்பு சார்ந்தும் இயங்குபவன் (தமிழ் சிவில் சமூக அமையம்) என்பதால் எனது தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அமைப்பின் அரசியலை வரையறுக்கலாமா என்ற கேள்வி எழும்புகிறது. ஒரு அமைப்பு அமைப்பென்ற வகையில் கட்சியரசியலில் குறிப்பிட்டவோர் தரப்பை தெரிவு செய்யாமல் இருக்கலாம். ஆனால் எல்லா அமைப்புக்களுக்கும் நிச்சயம் அரசியல் பார்வை ஒன்று இருக்கும். அது கட்சி அரசியலாக இருக்க வேண்டியதில்லை. நான் சார்ந்த அமைப்புக்கு அரசியல் உண்டு ஆனால் கட்சி அரசியல் வேண்டாம் என்று முடிவெடுத்துள்ளது. அதன் படியே நடக்கின்றது.


- தனிப்பட்ட ரீதியாக ஒரு வாக்காளராக எங்கள் எல்லோருக்கும் ஓர் அரசியல் மட்டுமல்ல – குறிப்பிட்ட கட்சி தெரிவும் இருக்கும். என்னை பொறுத்த வரையில் எந்தக் கட்சியை தெரிவு செய்கின்றேன் என்பது ஒரு கட்சியின் மீதான பாசத்தால் வரும் தெரிவல்ல. இன்றைய அரசியல் சூழலில் யார் சரியாக இயங்குகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்ட தெரிவு அது. அப்படி ஒரு கட்சி தெரிவு ஒன்று இல்லை என்று நாம் நடிக்க முடியாது. அப்படி இல்லாவிடில் ஒன்றை வாக்கை செல்லுபடி அற்றதாக்க வேண்டி வரும் அல்லது வாக்களிக்காதிருக்க வேண்டி வரும். எனது தெரிவு தொடர்பில் பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்கும் விவாதிப்பதற்கும் எனக்கு உரிமை உண்டு. நான் எனது முகப்புத்தகத்தில் தன்னிலை சார்ந்தே பதிவிடுகிறேன். எனது கருத்துக்கள் எனது கருத்துக்களே நான் சார்ந்த அமைப்பினது அல்ல. நான் சார்ந்த அமைப்பு என்னிலும் பெரிது.


- ஆனால் எனது கருத்துக்கள் / தெரிவு நான் சார்ந்த அமைப்பின் அரசியலில் வெளிப்படாது என்று சொல்வதும் ஒரு கற்பிதம் இல்லையா என நீங்கள் கேட்கலாம். இந்தக் கேள்வியில் உண்மை இல்லாமல் இல்லை. எனது தெரிவே எனது அமைப்பின் தெரிவாக இருக்காமல் அமைய இரண்டு காரணிகள் முக்கியம் என நான் நினைக்கிறேன்: (1) அமைப்புக்குள் போதிய பல்வகைமை இருத்தல் (2) அமைப்புக்குள் போதிய சனநாயகம் இருத்தல். இவை இருந்தால் குறிபிட்டவோர் நபரின் கருத்துக்கள் அமைப்பின் கருத்துக்களாகவும் இருக்க வேண்டிய அவசியமில்லை.

- பொதுவாக எமது பொதுப் புத்திநிலை எந்த கருத்தையும் கருத்தாக பார்க்காமல் அது எந்த அணியை சேர்ந்ததாக இருக்கும் எனப் பார்க்கும் தன்மையானது. எதையும் பகுத்து லேபல் போட்டு பார்க்கும் மன நிலை இது. இப்படியான மன நிலைகளே திறந்த விவாதத்திற்கு தடையாக இருப்பவை

தீபம்




உவர் உதைவிட்டிட்டுப்போய் மாடு மேய்க்கலாம். சனத்தைப் பேய்காட்டுற வேலையைச் செய்யக்குடாது. இண்டைக்கு, நாளைக்கு, இப்ப வரும், பேந்து வரும், காலமை வரும், பின்னேரம் வரும் எண்டு புலுடா விடுகிற கதைதானோ..? தெரியாது! சனம் ஆளைப் பிடிச்சுத் தின்னுற கோபத்திலை இருக்கு.

ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. கதைச்சுப் பேசிச் செய்துதாறன் எண்டு சொல்லிக் கனநாளாச்சு. ஒரு தைப்பொங்கலுக்கு முன்னம் தீர்பம் எண்டு சொல்லி வாக்குத் தந்தவை. இப்ப ஐஞ்சு தைப்பொங்கல் வந்து போட்டுது. சொன்னதைச் செய்யேல்லை. பிறகு காரியம் நடக்காது எண்டு கண்டவுடனை மத்தியஸ்தம் வைச்சுக் கதைப்பம் எண்டு சொல்லி அதையும் ஏற்பாடு செய்தம். அதுக்குப் பிறகும் ஒண்டும் நடக்கேல்லை. பிறகு சொல்லுச்சினம் தைப்பொங்கல் ராசி இல்லைப்போலை. தீபாவளிக்கெண்டு சொல்லுவம் எண்டிட்டு அவை கூட்டம் கூடி தீபாவிக்கு முன்னம் முடிப்பம் எண்டு சொல்லி இப்ப மூண்டு தீபாவளியும் வந்து போட்டுது. பிரச்சினை முடியேல்லை.

என்னடா வில்லங்கம் எண்டு சொல்லிப்போட்டு, மூத்தாம்பி அண்ணை சொன்னார், விசியம் இடியப்பச் சிக்கலாப்போச்சுது. மெல்லத்தான் கழட்டி எடுக்க வேணும். கொஞ்சம் பொறுங்கோ எண்டு சொல்லி  சொல்லி அதிலை ஒரு வருசத்துக்குக் கிட்டப் போட்டுது.

அதுக்கிடையிலை தான் இந்தப் பிரச்சினையை வெண்டு தாறன். என்னை நம்புங்கோ எண்டு சொல்லி ஒரு அப்புக்காத்து இடையிட்டு வந்து உள்ளுட்டான். அவன்ரை ஊர், பேர் , நாள், நட்சத்திரம் எண்டு ஒண்டும் தெரியாது. நிண்டவை சொல்லுச்சினம் ஆள் விண்ணன். என்னத்தைச் செய்துபோட்டும் போய் ஆளின்ரை காலடியிலை விழுந்தால் சரி. பிணையிலை உடனை வெளியாலை வந்திடலாம். அப்பிடிப்பட்டவர் அந்த அப்புக்காத்து எண்டு புழுகினாங்கள்.சரி எண்டு ஏத்துக் கொண்டம். பிரச்சினை இதுதான் எண்டு வடிவா விளங்கப்படுத்தினம்.

ஆள் எல்லாத்தையும் வடிவாக் கேட்டுப்போட்டுச் சொன்னார், இதை நான் இதை வெண்டு தாறன். ஆனால் ஒரு கொண்டிஷன். எனக்கு வன்முறையிலை நம்பிக்கை இல்லை. அதாலை கோடாரி, மண்வெட்டி எண்டு ஒண்டும் வேண்டாம். அடிச்சுச் சத்தியம் பண்ணுறன். அதொண்டும் வேண்டாம். பேனை, பெஞ்சில் இருந்தால் தாருங்கோ. மென்வலு ஒண்டைக் கண்டுபிடிச்சிருக்கிறன். அந்த மென்வலுவாலைதான் பிரச்சினையை வெட்டி ஆடுவன்.மென்வலுவெண்டால் என்ன எண்டு கேக்கப்பிடாது. மென்வலு வெண்டால் … அதுதான் மென்வலு.


அதோடை எப்ப காரியத்தை வெல்லுவன் எண்டும் சொல்லமாட்டன். வெண்டு தாற நேரம் கண்டுகொள்ளுங்கோ, என்ன? எண்டு துவங்கின அப்புக்காத்து, “இப்ப கனகாலமாப்போச்சுது, இன்னமும் சுணக்காதையுங்கோ,”  எண்டு சொல்ல, ஆள் கோவப்படுகிறார். உங்களுக்கு நான் முன்னமே சொன்னனான் தானே ! எப்ப காரியத்தை வெட்டி ஆடுவன் எண்டு சொல்லமாட்டன் எண்டு. அதாலை பொறுங்கோ.. பொறுங்கோ எண்டவர் ..

இப்ப தெற்குப் பக்கமாக் கையைக் காட்டி… அங்கை அனுப்புங்கோ, வெண்டுதாறன் எண்டு சொல்லுறார். என்னை மட்டுமில்லை. என்னோடை சேந்து அவரையும் அனுப்புங்கோ, இவரையும் அனுப்புங்கோ, எல்லாரையும் அனுப்புங்கோ. நாங்கள் எல்லாரும் சேந்து ஒருமித்த குரலிலை, கோரஸ்பாடி உங்களுக்கு விசியத்தை வெண்டுதாறம் எண்டு சொல்லிப்போட்டு பஜிரோவிலை பாஞ்சு ஏறிப்போனவர்தான். இன்னும் காணேல்லை “பிரச்சினை தீருமோ? ஆள் பிரச்சினையை வெல்லுவரோ?” எண்டு ஆளை ஆள் மாறிக்கேட்டுக்கொண்டு சனம் இரவு பகலாய் றோட்டிலை நிக்கிதுகள்..!! இதிலை, ஆர் பாவம்..?ஆர் புண்ணியம்..? எண்டு இந்த சரசக்காக்குத் தெரியாது.

## கறுப்பு ஜூலை நினைவாக...



தீபச்சிறுகதை



# தவனம்

**1**

எம்.எல் வசந்தகுமாரியின் கச்சேரி நடந்து கொண்டிருந்த போது பாத்றூம் போய் வந்த சிவகுமார் காதுக்குள் மெல்ல கிசுகிசுத்தான்.

"நிலமை சரியில்லை.... போவது நல்லது...."

சன்னமான இருளில், மேடைப் பிரகாசத்தில் எல்.வி. "கொஞ்சும் புறாவே"யை அட்டகாசமாக ஆரம்பித்திருந்தார்.

ரவியின் கையைப் பிடித்து மெல்ல இழுத்துக் கொண்டு இராமகிருஸ்ணமிசன் மண்டபத்தை விட்டு, அவசரமாக மூவரும் வெளியேறினார்கள்.

வெள்ளவத்தையிலிருந்து கல்ஸ்ரொப் வரும் வரையில் எதுவித பதற்றமும் தெரியவில்லை. புதிய சோனகத் தெரு 79 ஆம் நம்பர் ஒவிசின் மேல்மாடியில் அமைந்த ரூமுக்குள் போய் சேட்டைக் கழற்றும் வரை நெஞ்சில் கனத்த சுமை விலகவேயில்லை. மூன்றாம் மாடியின் மேல்புற கம்பிக்கிராதியில் நின்று தொலைதூரம் பார்த்தான்.

சுகததாச ஸ்டேடிய விளக்குகளின் பிரகாசமும்... விரைந்து செல்லும் வாகனங்களில் பொட்டு வெளிச்சங்களும்... நகரத்தின் பரபரப்புகளும் சந்தோசத்தைக் கொடுப்பதை இன்று தவிர்த்திருந்தன.

இடியப்பப் பார்சலும்... சொதிப் பைக்கற்றுமாக வந்த செல்வம். பரபரப்போடு இவனைத் தாண்டி தனது அறைக்குள் விரைந்தான். "யாழ்ப்பாணத்தில் 13 ஆமி... அவுட்டாம்... தின்னை வேலியிலாம்..." எக்கவுண்டன், ஜி.எம். வெள்ளை, பிறேமசிறி, நளிம்... எல்லோரும் வந்துவிட்டார்கள்.

ஜி.எம் மின் கறுப்பு வெள்ளை டி.வி. 9 மணி ஆங்கிலச் செய்தியில் சாதாரண செய்திகளை மட்டும் ஒளிபரப்பிய போது சற்று நிம்மதியாகவே இருந்தது. இரவு நெடுநேரம் இவன் விழித்திருந்தான். காலையில் பிலிங்வத்தையில் கொன்சோட்டியம் போய்... கொள்வனவு செய்யும் வேலைக்கு இவனைப் பணித்திருந்தார்கள்.

நாகராணி, லட்சுமி, காமல், பற்றிசியா, மல்காந்தியோடு ஐந்து அரைப் பரல்கள்... ஐஸ் கட்டிகளோடும், கிருஸ்ணனோடும் "சடாச்சரண்" எனப் பெயர் குறிப்பிட்டு அவர்களது கம்பனி லொறியை விக்ரர் செலுத்தும் போது கூறினான்.

"தொரை... நெலமை என்னவோ சரியில்லைதான். எம்.டிக்கு... இது வெளக்கு மாட்டேங்குதே..."

ஆமர் வீதியால் திரும்பி, சுகததாச ஸ்டேடியப் பின்புறமாக பிலிங்வத்தை பேச்சசிங் சென்ரருக்குள் லொறி நுழையும் போது யாருமே அங்கு வந்திருக்கவில்லை. காவலாளி அகலமான கதவை விரிய திறந்து விட்டான்.

நேரம் செல்லச்செல்ல பதற்றம் கூடியது. சுந்தரம் ஜிந்துப்பிட்டியிலிருந்து... குறுக்குப்பாதையால் வேகமாக வந்தான். "ஐயா.... நிலமை சரியில்லை.... உடனே வெளிக்கிடுங்க... யாரும் நிக்காதையுங்க..."

**2**

தராசில் போடப்பட்டிருந்த சி.பியின் 20 கிலோ இறால் மட்டும் நிறுக்கப்பட்டிருந்தது. இறாலை பரலில் கொட்டி கிருஸ்ணன் லொறியில் தூக்கி எறிந்தான். மல்காந்தியும் லட்சுமியும் அழுவதற்கு தயார்.

விக்ரர் வேகமாக லொறியை எடுத்தான். ஆமர் வீதி... எரிய ஆரம்பித்திருந்தது. ரோட்டில் ரயர்கள் குவிக்கப்பட்டிருந்தன. பொல்லுகளும் போத்தல்களும்... கல்லுகளும்... பறவைகளாகிச் சிதற ஆரம்பித்து விட்டன.

விக்ரரின் சாதுரியமான சாரத்தியத்தால் லொறி சப்பாத்து வீதிக்குள் நுழைந்து ஜெம்பட்டா வீதியை ஊடறுத்து விவேகானந்தாமேட்டைத் தாண்டி புதிய சோனகத் தெருவுக்குள்ளால் 79 ஆம் நம்பருள் நுழைந்தது.

கலவரம்.... நெருப்பு... வீடுகள்.... கண்ணாடிகள் நொறுங்கும் ஓசை.

79 ஆம் நம்பரின் கதவுகள் இறுக்கச் சாத்தப்பட்டன.

ஜீ.எம், வெள்ளை, எக்கவுண்டன், பிறேமசிறி, சிவகுமார், ரவி எல்லோரும் 3ஆம் மாடிக் கம்பிக் கிறாதியில்.

எட்டிய தொலைவு புகைமண்டலம்...

கொலன்னாவ... களனி... தொட்டலங்கை....

பிறேமசிறி அவசரமாக ஓடிவந்தான். எம்.டி யின்ரை கோல்.

ஜி.எம் கீழே இறங்கிப் பின் மேலே வந்தார். "லொறி... பத்திரமாக வந்து விட்டதா... என்று விசாரித்தார். வெள்ளவத்தைப் பக்கமும்.... பதட்டமாம்..."

எவரும் எதுவும் பேசவில்லை. மெஸன்சர் வீதியில் குழப்பம் ஆரம்பமாகியது. வானத்தில் போத்தல்களும், கல்லுகளும் பறக்கத் தொடங்கிவிட்டன.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகத் தகவல்கள் கசியத் தொடங்கிவிட்டன.

எம்.எல்.வி ஆக்களின் நிலைமை. இவனுக்குள் அந்தச் சிந்தனை இப்போது தலை தூக்கியது. கதவுகள் சாத்தப்பட்டே கிடந்தன. ரவிக்கு தாய் தகப்பனின் நினைவு. அவனுக்கு அழுகை பொத்துக் கொண்டு பீரிட்டது.

சிவகுமாருக்கும் கவலை... பயம். அழுகையை மரியாதைக்காக கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயற்சித்துக் கொண்டான்.

இவனுக்கு பயமும், கவலையும் அற்றதான ஒரு நிலை. யார் பற்றியோ, யாரைப் பற்றியோ நினைக்க மனதில்லை.

படித்து முடித்து, வேலை தேடி, விரக்தியுற்று, உறவுகளால் வெறுப்பேறி மனம் மரத்துப் போயிருந்தது.

ஒரு தேநீருக்காக கூப்பிடும் வரை காத்திருந்த அந்நியமாக்கப்பட்ட தன்மை. தற்கொலை செய்து மாய்ந்து கொள்ள முனைந்து தோல்வியுற்ற அனுபவச் சூடுகள்....

சகோதர சகோதரிகளின் புறக்கணிப்பு. பெருநாள் கொண்டாட்டங்களில் தூரமாக்கப்பட்ட தவிப்பு.

**3**

ஊர்... உறவு... யாவும் வெறுத்துப் போய்... மனதை விட்டுத் தூக்கியெறிந்த நிலை.

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமில்லாத ஒரு கிராமத்தைச் சேர்ந்த இவனுக்கு நாகவிகாரை, "சிற்றி பேக்கரிப் பாணும் பருப்புக் கறியும்" இவையும் சிங்களம் பற்றிய பூரண புரிதலாயிருந்தது.

பின்னர் அற்லஸ் ஹொலில் தபால் மூலம் சிங்களம் 1 ம் வகுப்புக்குரிய 4 பாடங்கள் படித்ததோடு அந்த அறிவும் முற்றுப் பெற்றது.

சிவப்புச் சிந்தனை வசப்பட்ட காலத்தில் வாட்சன் பெனான்டோ, கிக்கொட தர்மசேன, காந்தி ஓபயசேகரா... எனச் சிங்களத் தோழர்களின் பேச்சுக்களை மொழிப்பெயர்ப்பின் மூலம் கேட்டு கைதட்டிய அனுபவம் பின்னர் சித்தித்தது.

கொழும்பு ரயிலில் முதலில் பயணபட்டது, தாயாரின் புற்றுநோய் காரணமாக மகரகமைக்கானது. பின் கொழும்பு இறால் ஏற்றுமதி தனியார் நிறுவனத்தில் கஸ்டப்பட்டு வேலை பெற்று.... அப்போது பல சிங்கள நண்பர்கள்... ஊழியர்கள்: ஆண்கள், பெண்கள்.

சிங்களம் வாயில் நுழைய மறுத்து, தமிழ் போல பேசும், ஒரு தகுதி வாய்த்த நாட்களிலேயே இந்நிகழ்வு.

செல்வராசா- நிறம் வெள்ளை, நிறம் மட்டுமே வெள்ளை. மனம் கறுப்பு- கண்கள் பச்சை. எம்.டியின் உறவு சில நேரம் எரிச்சல் ஏற்படும் வார்த்தைகளும்... அதிருப்தியும்...

பிறேமசிறி வெள்ளை மாத்தையாவுக்கு மிக நெருக்கம். தினசரி அரைப்போத்தல் கறுப்பு அவனது கடமை. மேலதிக கட்டாய கடமை.

தொலைபேசி அடிக்கும் ஓசை. வெள்ளை கீழிருந்து கதைக்கும் குரல்.

"என்ன... கண்ணாஸ்பத்திரியடியிலை ஒரு ஆளை வானோடை போட்டுக் கொழுத்தியிட்டாங்களோ..."

"வேறை..."

"வானுக்கு ஏதேனும் டமேச்சே..."

"வெலிக்கடையிலையும் குளப்பமோ... என்ன...? கனபேரைக் கொண்டிட்டாங்களோ..."

வெள்ளை போனை வைத்து விட்டு பரப்பாக ஓடிவந்தான்.

பச்சை நிறக் கண்கள் சுருங்கியிருந்தன.

மெஸஞ்சர் வீதி என்கின்ற புதிய சோனகத் தெருக்கடைகள் பெரிதாக எரிய ஆரம்பித்திருந்தன.

மேலே ஹெலிகள் பறப்பது காதில் விழுந்தது. 3 ஆம் மாடி கம்பிக் கிராதியை விட்டு இவர்கள் நகராதிருந்தார்கள். பகல் கழிந்தும் பசியே வரவில்லை.

ஊரடங்கு...

**4** பிறேமசிறி தேநீர் போட்டுக் கொண்டு வந்தான். வெள்ளை, லோங்ஸ்சும் சேட்டுமாக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்க பிறேமசிறி அவனின் காதைக் கடித்தான்.

"சாமான் வாங்க முடியும்... ஆனால் சாப்பாடுதான் இல்லை..."

தொலைபேசியும் செயலற்றுப் போய்.... மின்சாரம் இல்லாது... இருள் கவிந்து வந்து 79 ஆம் நம்பரை நிறைந்தது.

"போர் என்றால் போர்... சமாதானம் என்றால் சமாதானம்"

ஜே.ஆரின் பட்டியல்... எரிந்தவையை விட எரியாதவையை எரியூட்டத் தொடங்கியது. ஜி.எம், ரவி, சிவகுமார் இவர்கள் மௌனத்தில் தள்ளப்பட்டார்கள்....

முன்னரே முரண்பட்ட முகங்கள் சற்று சினேகித பாவத்துடன் பேச காலம் உதவிற்று.

என்ன செய்வது?

மெஸஞ்சர் வீதி ரேடேஸ் உடைபடும் ஓசை… தமிழன் கடை,

“நான் தான் ஒடைக்கச் சொன்னேன்… ஒரு இறாத்தல் சுவிப்பிங் மா கேட்டேன் கொடுக்கல்லை… நான் தான் ஒடைக்கச் சொன்னேன்.”

சாரத்தை உயர்த்திப் பிடித்தபடி மெஸஞ்சர் வீதி சண்டியன் நிஸ்தார் கத்திக் கொண்டிருந்தான்.

நிஸ்தார் கத்தக் கத்த வெள்ளைக்கு உதறல் எடுத்தது. ஜி.எம் சினத்தோடு கூறினார்…

“வெள்ளை, அயலோட ஒத்துப் போக வேணும்… எண்டெல்லாம் சொல்லேக்கை சண்டித்தனம் காட்டுவாய். பாத்தியா…. நிலைமையை…”

பதற்றம்… பதற்றம்… பயம்… பாணில்லை, சோறில்லை, கறியில்லை, தேனீர் மட்டும்…

பயத்தோடும், பசியோடும் பகல் கழிந்து இரவு வந்து மீண்டும் பகல் வந்தது.

எப்படியோ மின்சாரம் மீள வந்தது. மீண்டும்… சலசலப்பு.

திரும்பவும் கலவரம் உருக்கொண்டது. “கொட்டி” கொழும்புக்கு வந்து விட்டதான பரபரப்பு. கம்பிக் கிராதியில்….இவனும் வெள்ளையும், ரவியும்… செல்வமும்.

ரவி கேட்டான்… “கொலன்னாவைப் பக்கம் தெரியிறது புதுப் புகையோ… பழம் புகையோ…?”

கிடைத்த அமைதிச் சூழல் குழம்பி மனங்களில் இருந்த நம்பிக்கைத் துளிர்கள்… கருகிச் சருகாகிப் போய்விட…

என்ன செய்வது? யாரிடம் போவது?

**5**

புதினப் பத்திரிகை நண்பன் போனில் பேசினான்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் முகாம்… அங்கிருந்து கப்பலில் யாழ்ப்பாணம்… செல்ல முடியும்.”

இவனது இரண்டு நண்பர்கள் எரியுண்டதும், வெட்டுப்பட்டதும் செய்தியாகக் கிடைத்தது. மனம் சூனியப்பட்டது. யாழ் செல்ல விருப்பமற்ற… தவிர்ப்பு.

கடந்தகால அனுபவத்தின் சூட்டுக் காயங்கள் ஆறாமல் தழும்புகளாக இதயத்தில்…

கலவரம் வெடித்து மூன்று நாட்களாகியும் ஒரு வித ஆறுதலுமற்ற… தனிமை உணர்வு.

இறந்தோர் பட்டியல்களில் பட்டியலாக பலரின் பெயர்களில் இவனது பெயரும் இருந்திருக்கலாம்.

பிரேமசிறி… மால்பொறா பைக்கற் ஒன்றை நீட்டினான். புதுப்பழக்கம், புதுப்புகை.

தொண்டை வரண்டு கண்டசாலாவின் குரலில் இவன் பேசத் தொடங்க…

டன்கில்… றிபிள்வைவ்… பிரிஸ்டல்… கோல்ட்லீவ்… பிரேமசிறி எப்படியோ கொண்டு வந்து விடுவான்.

ஜி.எம்மும், எக்கவுண்டனும் கிடைத்த சந்தர்ப்பத்தில் எங்கோ சென்று யாழ் போனதாக யாரோ சொன்னார்கள். அதுபோலவே செல்வம் உட்பட பலர்…

வெள்ளை, ரவி, சிவகுமார், இவன், பிரேமசிறி.

நிலமை வழமைக்குத் திரும்பியதாக வானொலி மட்டும் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தது. ஜலெண்ட் லோஜ் வாசலில் இருந்து வான்கள்- மினிபஸ்கள் யாழ் போவதாகத் தகவல்கள் கிடைத்தன.

கோல்ட் லீவ்… இப்போது மனதுக்கும் உதட்டுக்கும் பழக்கப்பட… தொடர் சீகரெட் ஊதல்.

எம்.எல்.வி. ஆட்கள் மிகுந்த சிரமத்துடன் தென்னிந்தியாவுக்கு கட்டுநாயக்காவிலிருந்து பயணப்பட்டதாக

**நந்தினி சேவியர்**



ஐந்து நாள் கழிந்து வெளிவரத் தொடங்கியிருந்த ஒரு தமிழ் தினசரி கூறியது.

வெள்ளை குடும்பத்தைக் காண யாழ் புறப்பட ஆயத்தப்பட்ட போது பிரேமசிறி கவலையோடு கறுப்பு அரையுடன் வந்தான்.

எரிந்த மனமும்… கடைகளும் மனிதர்களும் இவன் சலிப்போடு தனித்தான். “ஏய். எம்.டி கேக்கிறார்… நீ… யாழ்ப்பாணம் போகவில்லையா?”

இவனுக்கு மெல்லச் சிரிப்பு வந்தது. “கூல்ட் ரூம்” இல் இருந்த இறாலையும், கணவாயையும் இவர்கள் பசியில் கிடைத்த அரிசியைப் போட்டுக் கஞ்சி காச்சி சாப்பிட்டதை அறிந்து, அவர் கூறிய வார்த்தைகள் இப்போதும் அவனுக்கு நினைவில் வந்தது.

“வெள்ளை. நீங்கள் சாப்பிட்டது… உண்மையில் என்னைச் சாப்பிட்டது மாதிரித்தான்….” ஜி.எம் யாழிலிருந்து ரெலிபோனில் பேசினார்.

“சுகமாய் இருக்கிறியா? ரவியும்… சிவகுமாரும்… ஊருக்கு வந்து விட்டார்கள். திரும்பி வருவாங்களோ தெரியாது… நீ வரவில்லையா…?”

“இல்லை.“ ஒரே வசனத்தில் விடைசொல்லிப் போனை வைத்தான்.

இறால் கோது எடுபடாமல் கிடந்த கழிவறையிலிருந்து நாற்றம் மூன்றாம் மாடி றூம் வரை எட்டிப் பார்த்தது. பிரேமசிறியும், இவனும் கழிவறையில் மண்ணெண்ணை ஊற்றி நெருப்பு வைத்தார்கள் பிண நாற்றம். இதே போல்… நாறி எரிந்த மனிதர்கள்… எத்தனை பேர்? கட்டிலில் சாய்ந்தபடி இவன் யோசித்தான்.

புயலடித்து ஓய்ந்த பத்தாவது நாள். வானொலி கூறாமலேயே நகரம் வழமைக்குத் திரும்பத் தொடங்கியிருந்தது.

“தொரைக்கு இரவு சாப்பாடு என்ன?” கேட்டபடி பிரேமசிறி அறைக்குள் வந்தான்.

பலபேர் தங்கிய 3 ஆம் மாடி. இவன் மட்டும் தனியே “பத்து இடியப்பம் சொதி… இரண்டு கோல்ட்லீவ். ஒண்ட நீ எடு…” லோங்சின் பின்பக்கமிருந்து ஒரு பத்து ரூபா நோட்டும்… சில்லறைகளும்… கை மாற…

பிரேமசிறி கீழ் இறங்கினான். இவன் மூன்றாம் மாடி கம்பிக் கிராதிக்கு வந்தான்.

சீதளக் காற்று முகத்தில் அறைய எம்.எல்.வியின் ஐயா சாமி… பாடல்… கீழ்த்தோட்ட வீடொன்றிலிருந்து காற்றோடு இழைந்தது.

உடம்பும்… மனமும்… சில்லிட்டது.

தூர சுகததாச விளையாட்டரங்கு,

ஒளி விளக்குகள், பொட்டுகளாக ஊரும் வாகன வெளிச்சங்கள்.

வாய் சிகரெட்டுக்குத் தவனப்பட்டது.

பிரேமசிறி வரும்வரை இவன் காத்திருந்தான்.

*நன்றி : 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' சிறுகதைத் தொகுதி.*

# கற்பனைச் சிறகெடுத்து சிற்றுடுக்கோடு ஒரு பாடல்



*சிற்றுடுக்கதின் ஓசையிற் பாடவும்*
*தீயுமிழ்விழி கொண்டுமே ஆடவும்*
*கற்பனைச்சிற கோடுவான் வீதியில்*
*கையசைக்கவும் கற்றிடு மானுடா.*
*அற்புதம் இவ்வையகம் தானடா*
*அந்தவானவர் பூமியென் றானதும்*
*முற்பிறப்பதும் மெய்யிலை பொய்யடா*
*மூடுமந்திரம் அற்றது வாழ்வடா.*

*புனிதமென்பது பொய்யிலா திருத்தலாம்.*
*புரட்சியென்பது வாழ்வைப் புதுக்குதல்.*
*பணிதலற்று நிமிர்வது மகிழ்ச்சியாம்*
*பாரமற்று இருப்பவன் தேவனாம்*
*தனிமையென்பது சாதரும் நஞ்சதாம்*
*தாய்நிலம்தனைத் தூக்கியே கொஞ்சலாம்*
*துணிவு கொண்டெழ வேண்டுமே மானுடா.*
*துயரமென்பதைத் தூக்கியே வீசடா.*

*அழகுபூத்திடச் செய்வது காதலாம்.*
*அதிகபலமது காதலாற் சேருமாம்.*
*முழவுபேரிகை மத்தளம் கொட்டியே*
*முதமைவந்தெதிர் கொள்ளவும் ஆடக.*
*உழவுமாடென வாழ்தலை விட்டுமே*
*உலவுகாலிலே கிண்கிணி கட்டியே*
*இழவுவீடிலை எங்களின் நாடிது*
*இனியபூமலர்ந் தாடிடும் வேரிது.*

*பெண்மையென்பது தாய்மையின் ஊற்றடா*
*பெண்மையேயுயிர் மூச்செனும் காற்றடா.*
*பெண்மையென்பது பூமியின் தோளிலே*
*பூமியென்பது பெண்மையின் காலிலே*
*பெண்மையென்பதைப் பூவெனச் சொல்வதா?*
*பெரியதெய்வமே பெண்மைதான் அல்லவா?*
*உண்மையுண்மையென் றூதடா சங்கினை*
*உலகமேகொடு பெண்மையின் பங்கினை.*

*நிலவுதெய்வமாம், நீள்வயல் வரம்பிலே*
*நின்றுலவிடும் போதுநீ தெய்வமாம்.*
*அழகுபூத்திடும் யாவுமே தெய்வமாம்.*
*அதை வணங்கிடும் மானுடன் தெய்வமாம்*
*இலகெனச்சுமை யற்றதாய் வாழ்வினை*
*எய்திடும்மனப் பக்குவம் தெய்வமாம்*
*உலவுகாற்றது தெய்வமாம் நாளதின்*
*உதயவேளையிவ் வுலகது தெய்வமாம்*

*வதைக்குநேரெதி ராகவே நின்றிடு,*
*வலியனாகியே வல்லமை சேர்த்திடு*
*விதைத்தமாமணி வீரரைக் கும்பிடு*
*விடியும்வேளைபூ பாளமே பாடிடு*
*உதைத்தகாலினைக் கும்பிடு மோர்நிலை*
*உனக்குநேருமென் றாலுயிர் நோயுடல்*
*புதைக்கும்போதிலும் புன்னகை செய்திடு*
*புதியவாழ்வதின் வேரென ஆகிடு.*

**– புதுவை இரத்தினதுரை**

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020



## வடமாகாண வெங்காயமும் அரசியல்வாதிகளும்

மேடையில் உணர்ச்சி பூர்வமாகப் பேசி வாக்குறுதிகள் வழங்கி நாடாளுமன்றம் சென்று, காலத்தை வீணடித்து, மக்களை இன்னமும் துன்பத்தில் வைத்திருக்கும் நம் அரசியல்வாதிகளைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

எமது தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் சர்வதேச நாடுகளிடமிருந்தும் ஜெனீவாவுக்குச் சென்று தீர்வுகாணுவோம் என்று கூறும் எமது தமிழ் அரசியல்வாதிகள் ஏன் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும்? நீங்கள் அவர்களுக்கு வழங்க வேண்டியது நாடாளுமன்றம் செல்ல வாக்குகள் அல்ல, சர்வதேசம் செல்ல வேண்டிய விசா அனுமதியும் விமானப் பயணச் சீட்டு மாத்திரமே.

கிணற்றில் தொலைத்ததை சமுத்திரத்தில் தேடும் எமது அரசியல்வாதிகளின் 70 ஆண்டு கால தீர்வு வாக்குறுதிகளை நீங்கள் நம்புகிறீர்களா?

கட்சிக்குள் குழு அமைக்கும் மத்தியகுழு, செயற்குழு என்று சகல செயற்பாடுகளுக்கும் குழு அமைத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளை தீர்க்க குழு அமைத்தார்களா?

20 ஆண்டுகளாக இருக்கும் அரசியல்வாதிக்கு சம்பாதிக்க பணத்;தையும் தேடிய சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு மக்கள் ஆணை தேவைப்படுகிறது. உங்கள் வாக்குகளை அவர்களுக்கு அளித்தால் தங்களுடைய சொத்துக்களை மேலும் பன்மடங்காக்கி, உங்களை அடக்கி ஆள்வார்கள். இதற்காகவா நீங்கள் வாக்களிக்கப்போகிறீர்கள்?



எம் தமிழ்மக்களின் சொத்தை ஆக்கிரமித்து அபகரித்த அரசியல்வாதிகள் உங்கள் சொத்துக்களை மீட்டுத் தருவார்கள் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

விடுதலைப் போராளிகளுக்கு தண்டனை வழங்கிய நீதியரசர் தற்போது அவர்களைப் போற்றி தலையில் தூக்கிவைத்து கொண்டாடும் நாடகம் உங்களுக்குப் புரிகிறதா?

வீணாகப் போகின்ற இரணைமடுத் தண்ணீரை வட பகுதி மக்கள் குடிப்பதற்கு விநியோகிப்பதை தடை செய்த அரசியல்வாதியை மறக்கமாட்டோம்! மன்னிக்கவும் மாட்டோம்!

சாதாரண அரச உத்தியோகத்தராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாடமாளிகைகளுக்கும், ஏக்கர் கணக்கான காணிகளுக்கும் பலகோடி ரூபாய் சொத்துக்களுக்கும் சொந்தக்காரர்களாகியது எப்படி?

புலி வேடம் பூண்டு, புலியாய் பேசி நாடாளுமன்றம் சென்றவர்கள் வாய் கட்டிய பூனைகள் போல் நாடாளு மன்றத்தில் நரித்தந்திரத்தை தங்கள் தேவைக்கு பயன்படுத்தி மீண்டும் 60 மாதத்தில் வருவார்கள். நீங்களும் வயிற்றைக்கட்டி உங்கள் குழந்தைகளையும் பாதாளத்துக்குள் தள்ளப்போகிறீர்களா?

தங்கள் பாதுகாப்புக்கு பெரும்பான்மை இனப் பாதுகாப்புப் படையினரை வைத்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் முதலில் அதனை அகற்றுங்கள். அதன்பின்னர்படையினரைவெளியேற்றுவதற்கான கோரிக்கையை முன்வையுங்கள்!

யாழ்ப்பாணத்து வெங்காயம் காரமானது. நமது அரசியல்வாதிகள் வாய்ச்சொல்லில் காரமானவர்கள். வாக்குறுதிகளை அள்ளிவீசி வாக்குவேட்டை செய்து, நாடாளுமன்றம் சென்று, ஐந்தாண்டுகளின் பின் சாதித்தவைகளை திரும்பிப் பார்த்தால் உரித்த வெங்காயம் போல் ஒன்றுமே இருக்காது. உரித்தவர்களுக்கு கண்ணீர் மாத்திரமே மிஞ்சியது.

முதலில் கை சின்னத்திற்கும் உங்கள் மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றை அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து மற்றைய மூன்றாவது விருப்பு வாக்கை எமது கை சின்னத்தில் போட்டி இடும் நீங்கள் விரும்பியவருக்கு அளித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டு அதேசமயம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொள்வதன்மூலம், வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.



'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்

## (விண்ணன்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinan05